Germany: 1DM, Switzerland: 1SFr, France: 5Frs, U.K: 50P, Canada: $ 1, Denmark: 5Kr, Holland: 1.25 Gul

வருடம் - 03 திருவள்ளுவர் ஆண்டு - 2027 இதழ் - 28

Largest Circulation in Europe

# இளைஞன்

புரட்டாதி - 1996 மாத இதழ் - ஜெர்மனி

Tel: 069/ 704439 - ELAIGNAN TAMIL MONTHLY - Fax: 069/ 775669

**ஆதவா ஆசியா சென்ரர்**

தங்க நகைகள், சேலை வகைகள், ரெடிமேட் உடுப்புக்கள், எவர்சில்வர்ப் பொருட்கள், ஓடியோ வீடியோ, சீடி, வார மாத பத்திரிகைகள், மரக் கறி, கடலுணவு வகைகள், அனைத்தையும் மலிவு விலையில் பெற்றுக்கொள்ள-

ADAVAA ASIYA CENTAR

Taunus Str- 15, 60329 Frankfurt/M, Germany
Tel: 069/ 95 03 61-2, Fax: 069/ 93 40 45

# தமிழீழத்தில் காணாமல் போகும் தமிழ் இளைஞர்கள்!

தமிழீழத்தில் சிங்கள இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் கண்மூடித்தனமாக பல இளைஞர்கள் கைது செய்யப்படுகிறார்கள்!

இவர்கள் கைது செய்யப்பட்ட சில நாட்களிலேயே காணாமல் போவதாகவும் தெரியவந்துள்ளது. கைது செய்யப்படும் இளைஞர்கள் குறித்து விசாரிக்கச் செல்லும் பெற்றோருக்கு. இக் கைதுகளுக்கும் எமக்கும் எதுவித தொடர்பும்

தொடர்ச்சி 13 ம் பக்கம்...




100 வது ஆண்டில் ராஜ நடை போட்டு வந்த 26 வது ஒலிம்பிக் விளையாட்டுக்கள் ஓஹோவென்று அட்லாண்டா நகரில் நடந்தேறி முடிந்து விட்டன. எட்டாவது நாளில் கெட்ட கனவு போல, ஒலிம்பிக் பூங்காவில் ஒரு குண்டு வெடித்தது. விளையாட்டுக்கள் உற்சாகத்தோடு தொடர்ந்தன.

அடாவடித்தனமான குண்டுகள் வெடித்தாலும் தொடரும் எங்கள் விளையாட்டு என்று முழங்கிய அமைப்பாளர்கள் வெற்றிகரமாக விளையாட்டை நடாத்தி முடித்திருக்கிறார்கள்.

2000 ம் ஆண்டு என்னிடம் வா, வா என்று அவுஸ்திரேலியாவில் சிட்சி மாநகரம் இப்பொழுதே ஒலிம்பிக்கை கைநீட்டி வரவேற்கத் தொடங்கிவிட்டது.

பல சாதனைகள் முறியடிக்கப்பட்டு, மிகச் சிறப்பாக விளையாட்டுக்கள் நடந்தேறி முடிந்ததும் ஒரு சாதனை!

முழு விபரம் - 13 ம் பக்கத்தில்.

## கந்தப்புவும், சோமண்ணையும்



கந்தப்பு: திருவள்ளுவர் ஐரோப்பாவிற்கு வந்தால் எப்படி குறள் எழுதியிருப்பார்?

சோமண்ணை: 'வட்டிக்கு விட்டவன் வயிறு எரிய வாழ்வான், சீட்டுப்பிடித்தவன் சிரழிஞ்சு போவான்' என்று எழுதியிருப்பார்.

கந்தப்பு: ???!!!...

திருவாளர் அகதியார்-



பிராங்பேர்ட் நகரில் மக்கள் மனங்கவர்ந்த ஸ்தாபனம்! ஒருமுறை விஜயம் செய்யுங்கள் உண்மையை உணர்வீர்!

**அம்பாள் ஆசியன் செசாப்**

சாறி வகைகள், அனைத்துரக ஜவுளிகள், எவர்சில்வர் பொருட்கள், மற்றும் கடலுணவுப்பொருட்கள், மரக்கறி வகைகள், அலங்காரப்பொருட்கள் தங்க நகைகள், மங்கள வைபவங்களுக்கான அனைத்து தேவைகளுக்கும் நாடுங்கள்

AMPAL ASIAN SHOP - Mainzerland str 111, 60329 Frankfurt/M, Tel & Fax: 069/231277-



http :\\www.thamizham.net
FREE E - BOOKS (TAMIL) -1082/09

வருடம் - 03 இதழ் - 28 புரட்டாதி - 1996

# இளைஞன் பார்வையில்!

## பண்டாரநாயக்கா குடும்ப ஊழலும் சீனாவுடன் ஆயுத தரகும்

இலங்கையில் உண்மை நிலையை உலகறியச் செய்யாது தணிக்கைகளை அமுல் படுத்தியும், தமிழர்களின் அவல நிலையை பொருட் படுத்தாமலும் உலக நாடுகலை ஏமாற்றி வரும் சந்திரிகா அரசு காரணமில்லாமல் இவற்றைச்செய்யவில்லை.

தங்கள் குடும்பமும் அவர்களைச் சார்ந்தவர்களும் வேணுமென்றே நாடகம் நடத்தி, பெரும்போர் தொடுப்போம் என சிங்கள மக்களை ஏமாற்றி, போருக்கான ஆயுதங்களை குவிக்க முயன்றது. தமக்கு தேவையான ஆள் அணிகள் இல்லையென்றும், அதற்காக இராணுவ படையினர் தொகையை அதிகப்படுத்த முயல்வதுபோல் பாசாங்கும் செய்தது அம்மையாரின் அரசு.

தமிழர்களைக் கொன்றொழிக்க வேண்டும் என்று சிங்கள மக்களை ஏமாற்றி, அதேவேளை பண்டாரநாயக்கா உறவினர்களின் சொந்த நலனுக்காக சில வெளிநாடுகளுடன் ஆயுதப் பேரங்களை நடாத்திக் கோடிக்கணக்கான பேரம் பேசிய தரகுப் பணங்களை (கையுறை) இலங்கை அரசு பெற்றுள்ளது என அண்மையில் வெளிவந்த செய்திகள் கூறுகின்றன.

இந்த ஊழலோ ஊழலில் முதலாவதாகக் கூறப்படுபவர் இலங்கை இராணுவ அமைச்சரின் மைத்துனரான சீவிலி ரத்வத்த. இவர் குடியரசுத்தலைவர் சந்திரிகாவின் மாமனார்! பிரதம மந்திரி சிறிமாவோவின் சகோதரர்!!

இந்த சீவில ரத்வத்த அரசாங்கத்தின் சேரிப்பணத்தை சீவிலி போட்டு உருவுவது போல், ராணுவத்திற்குப் போர் தளபாடங்கள் வெளிநாடுகளிலிருந்து கொள்முதல் செய்து கொடுத்ததற்காக தரகு (கமிஷன்) பணமாக மட்டும் 400 மில்லியன் டொலர்களை அதாவது இலங்கைப்பணத்தில் ரூபா 2100 கோடி பெறுமதியான பணத்தை சம்பாதித்திருக்கிறார் என்ற உண்மை வெளியாகியிருக்கின்றது.

இந்த ஆயுதங்களை பெரும்பாலும் சீனாதான் இலங்கைக்கு விற்பனை செய்கின்றது. சீனா இந்தியாவிற்கும், ஏன் அமெரிக்காவுக்கும்கூட எதிரான நாடு. ஆகவே இச்சீன ஆயுதங்கள் இலங்கையில் குவிந்தால், தமிழ்ஈழப் பகுதியை துழைப்பதோடு மட்டும் இருக்காது, இந்தியாவிற்கும் முறைமுக அச்சுறுத்தலாக அமையலாம். திருகோணமலை மற்றும் சிங்கள பகுதியில் இருக்கும் (VOICE OF AMERICA) அமெரிக்காவின் குரல் நிலையங்களுக்கும் அச்சுறுத்தலாக அமையுமன்றோ!

ஆகவே இந்தியா, சிங்கள - தமிழ் பிரச்சனையை தீர்த்து வைப்பதில் மேலும் தாமதம் செய்யாது முதல்வர் கருணாநிதியுடன் சேர்ந்து தீர்த்து வைக்க வேண்டும். வெளிநாடுகளில் குறிப்பாக அமெரிக்காவில் வாழ் தமிழர்கள் தீவிர நடவடிக்கைகளை எடுத்து அமெரிக்காவை உற்சாகப்படுத்தி, உலக அரங்கான ஐ. நா. சபையில் இவ்விடயத்தை எடுக்கக் கோரிக்கைகள் விடவேண்டும். இதனால் குட்டையைக் கலக்கி (FISHING IN TROUBLE WATERS) மீன் பிடிக்கும் நாடுகளின் அபிலாசைகளுக்கும் முற்றுப் புள்ளி வைக்கலாம். ஈழத்தமிழர்களின் அவல வாழ்க்கைக்கு ஓர் நல்ல முடிவு கிடைக்கலாம். ●

## சந்திரிகாவும் ரத்வத்தையும்

சந்திரிகா: நீங்க ரொம்ப அனுபவசாலி

ரத்வத்தை: எப்படித் தெரியும்?

சந்திரிகா: நீங்க கொடுத்த ஒரேயொரு இராணுவப் பயிற்சி வெற்றி!

ரத்வத்தை: என்ன பயிற்சி?

சந்திரிகா: அப்பாவிப் பெண்கள் கற்பழிப்பு!

ரத்வத்தை: ???!!!. . .

-வை. யோகேஸ், ஜெர்மனி-


## "இளைஞன்" விளம்பர விபரம்:

(ஒரு மாத இதழில் ஒரு தடவை உள்ளே பிரசுரிப்பதற்கான விபரம்)

ஒரு பக்கம் (19X 26 cm) 200,-DM.
அரைப்பக்கம் (13 X 19 cm) 100,-DM.
கால்வாசிப்பக்கம் (9.5 X 13 cm) 50,-DM.

தொடர்ந்து (ஒரு வருடம்) விளம்பரம் பிரசுரிக்க விரும்புவோர் 'இளைஞன்' உலக பிரதிநிதிகளுடன் தொடர்பு கொண்டு குறைந்த விளம்பர விபரத்தை அறிந்து கொள்ளலாம்.
ஆதரவிற்கு நன்றி!
'இளைஞன்' குழு-



"இளைஞனால் உலகில் ஒன்றிணைவோம்!"

ELAIGNAN TAMIL MONTHLY
Largest Circulation in Europe
இளைஞன்

முகவரி:-
ELAIGNAN
GINNHEIMER STR. 24 A
60487 FRANKFURT/M
GERMANY
Tel: 069/ 70 44 39
Fax: 069/ 77 56 69

அச்சுப்பதிப்பு: சிந்துநதி பதிப்பகம்

Editor: ARTIST SEGAR
ஆசிரியர்: ஓவியர் சேகர்

இணை ஆசிரியர்:
ஏ. ஜே. ஞானேந்திரன்

துணை ஆசிரியர்:
ரவிசெல்லத்துரை

நமது நிருபர்கள்:
கொழும்பு: R. பார்த்தீபன்
சென்னை: எம்ஆர்ஜி

சந்தா விபரம்:
சகல நாடுகளுக்கும்
12 மாதம்: 30 DM
(தபாற் செலவுடன்)

"இளைஞன்" உலக பிரதிநிதிகள்

சுவிற்சலாந்து
P. சந்திரன்
Haupt str. 54
4127 Birsfelden
Basel (CH)
Tel: 061/ 46 21 30 2

பாரீஸ்
வண்ணை தெய்வம்
Log. 18023
212, Ave. du 8mai 1945
93150 - Blanc Mesnil
France Tel: 48 67 01 25

டென்மார்க்
S. செல்வன்
Nr. Sundbyvej - 28 st.
8900 Randers
Tel: 86 41 66 32

லண்டன்
சிவம் - பரமலிங்கம்
15 Farn House
HA0 4Uy Wembly - UK
Tel: 0181/ 90 28 20 9

ஹொலண்ட்
J. S. ஞானமுத்து
Pastorijstraat 48
6361 Aj Nuth
Holland
Tel: 045/ 52 42 90 3

ஜேர்மனி
T. ஜோதி
Lange str. 243
59067 Hamm
Tel: 01 71 83 14 70 0





ஜெர்மனியில் மலிவு கடை என்று மக்களால் அழைக்கப்படுவது..

# ஆச்சி துணை

ஐயர், மணவறை, சோடனை, திருமண அழைப்பிதழ்கள், கமெரா போன்ற உங்கள் வைபவங்களுக்கான தேவைகளுக்கு நீங்கள் ஓடி, ஓடி அலையாமல் ஓரே இடத்தில் ஆலோசனையை மாத்திரமன்றி அனைத்து சேவைகளையும் பெற்றுக்கொள்ளுங்கள்.

AACHCHITHUNAI, Salinen str 1/1, 74177 Bad Friedrichshall, Germany, Tel & Fax: 07136/ 3921




## ஒரே ஒரு முத்தமாவது...

சுரேஷ் தன் குழந்தையின் மீது மிகவும் அன்புள்ளவன். தினசரி வேலைக்கு புறப்ப டுவதற்கு முன்னால் தன் குழந்தைக்கு இரண்டு முத் தம் கொடுத்துவிட்டுத்தான் போவது வழக்கம். சில சமயம் அப்படி முத்தம் கொடுக்க மறந்துவிட்டுப் போய்விட்டால், அன்று முழுக்க வீட்டில் குழந்தை செய்யும் ரகளையை அவன் மனைவியால் சமாளிக்க முடியாது.
ஒரு நாள் தன் நண்பரோடு சுரேஷ் காரில் வேலைக்கு புறப்பட்டான். அவசரத்தில் குழந்தைக்குத் தரவேண்டிய இரண்டு முத்தத்தை மறந்து விட்டான்.
அப்பொழுது வெளியே ஓடிவந்த அவன் மனைவி "ஏன்னங்க, ஒரே ஒரு முத் தமாவது கொடுத்துவிட்டுப் போங்க. இல்லேன்னா நாள் முழுக்க என்னால நிம்மதியா இருக்க முடியாதுங்க!"
அதைக்கேட்டு சுரேஷ்சின் நண்பர் வியர்த்துப்போய் நின்றார்!

எக்ஸ் - பிராங்பேர்ட்-

## ஐரோப்பா ஐயாத்துரையும், சிலோன் சின்னத்துரையும்!

## திருமண அழைப்பிதழ்

சிலோன் சின்னத்துரை: சுந் தரத்தான் கலியாண காட் புதுவிதமாய் அடிச்சு இருக் கிறானாம் பாத்தனியலே?

ஐரோப்பா ஐயாத்துரை: கலியான வீட்டுக்கு வரமு டியாதவர்களை, வருபவர் களிடம் மொய் பணத்தை கொடுத்து விடவும் எண்டு போட்டிருக்கிறான்.

சி. சி. துரை: ???!!!. . .

## சீதனம் வேண்டாம்! ஆனால்...

சி. சி. துரை: பத்திரிகை ஆசி ரியர் சீதனம் வாங்காமல் கலியாணம் செய்தவர் எண்டு சொன்னியள். இப்ப என்ன சொல்லுறார்?

ஐ. ஐ. துரை: மாதா மாதம் தான் வெளியிடுகிற பேப்ப ரில் ஆயிரம் பேப்பர் வித் துத் தரவேணும் எண்டு சொல்லுறார்.

சி. சி. துரை: ???!!!. . .

ரவிசெல்லத்துரை-

## ஐரோப்பாவில் திருமணம்!

பெண்ணின் தகப்பன்: மாப் பிள்ளை ஏன் கலியாண நேரத்தில் அவ்வளவு பிடி வாதமாய் நிற்கிறார். பகல் எண்டால் பின்நேரம் 3 மணிக்கும், 5 மணிக்கும் இடையில அல்லது சாமம் 2 மணிக்கு எண்டு?

மாப்பிள்ளையின் தகப்பன்: அவர் ரெஸ்ரோறண்டில் எல்லே வேலை செய்கிறார். 3 மணி எண்டால் உடனே தாலியைக் கட்டிப்போட்டு 6 மணிக்கு வேலைக்கு நிற்க லாமெல்லே, இரவெண்டால் 2 மணிக்குப் பிறகு லீவுதானே உங்களுக்கு எப்ப வசதி. . .

பெ. தகப்பன்: ???!!!. . .

-இராஜகாந்தன், பரீஸ்-

## ஒரு தோடுடைய செவியன்...!

ஆசிரியர்: தோடுடைய செவியன்" என்ற தேவா ரத்தை பாடச்சொன்னால் "ஒரு தோடுடைய செவியன்" என்று ஏன் பிழையாக பாடு கிறாய்?


மாணவன்: இப்ப எங்கட பெடியள் எல்லாம் ஒரு காதிலைதானே தோடு போடுகினம். அதுதான்.....


ஆசிரியர்: ???!!!. . .

ரவிசெல்லத்துரை-

ஒருவர்: உங்களிட்ட ஒரு பூனை இருக்கிறதாகவும் அது தன்ர பேரைத் தானே சொல்லும் எண்டும் ஊருக் குள்ள கதைக்கினம் உண் மையே அண்ணே?
மற்றவர்: ஓம் ஓம் தம்பி.
ஒருவர்: அதுசரி உங்கட பூனைக்கு என்ன பேரண்ணை?
மற்றவர்: "மியாவ்"
ஒருவர்: ? ? ? ? ? ? ?
யசோ

முதலாளி: (புதிதாக வேலைக் குச் சேர வந்தவரிடம்) உமக்கு எத்தனை பாஷைகள் கதைக்கத்தெரியும் ?
வேலைக்குச் சேர வந்தவர்: எல்லாப் பாஷையும் கதைப் பேன் சார். தமிழை வாயா லும், மற்றைய பாஷைகளை கைகளாலும் கால்களாலும் கதைப்பேன் சார்.
முதலாளி: ? ? ? ? ? ? ?
யசோ


அன்னை பசித்திருக்க அன்னதானம் செய்தவராலும்



# போகிற போக்கில்..

ஏ. ஜே. ஜி



## சின்ன வயதில் பெரிய சாதனை!




பிறப்பவர்கள் எல்லாம் புக ழுடைந்து விடுகிறார்களா? அதிலும் சிறிய வயதிலேயே எல்லோருக்கும் புகழ் கிடைத்து விடுகின்றதா?
அவளுக்கு வயது 10 தான்!
அழகான இந்த அமெரிக்க சிறுமியின் பெயர் அலெக் ஸாடிரா நெச்சிற்றா!
கான்வஸ் துணியில் ஓவியங் களை சிறப்பாக வரைகிறாள் இவள். இவளுடைய ஓவியங் கள் 50, 000 டாலர்கள் வரையில் சம்பாதிக்கின்றன என்றால் நம்புவீர்களா?
6 அடி உயரமான கான்வஸ் துணிகளில் இவள் தீட்டும் அற்புதமான ஓவியங்கள், பிக்காஸோ போன்ற அசத் தும் ஓவியர்களின் கைவண் ணங்களோடு ஒத்துப் பேசப் படுகின்றன. பல பிரபல்யங் கள் ஆவலுடன் பெருந் தொகை பணம் கொடுத்து, இச்சிறுமியின் ஓவியங்களை வாங்கி வீடுகளில் மாட்டுகி றார்கள்.
இவரது பெற்றோர் ரேமா னிய நாட்டினைச் சேர்ந்த வர்கள். இன்று இவள் பெற் றோருடன் அமெரிக்காவில் லாஸ் ஏஞ்சல்ஸ் மாநகரில் குடியிருக்கிறாள்.
ஆறு வயதிலேயே கான்வஸ் துணியில் ஓவியம் வரையத் தொடங்கி விட்ட இவ ளுக்கு, இனி ஏறுமுகந்தான் என்பதில் என்ன சந்தேகம்?

## ஆட்டம் காணாத ஆளுநர்.

ஆளுவது என்பது அப்படி ஒன்றும் சாமான்னியப்பட் டது என்று எண்ணி விடா தீர்கள்.
கடந்த 50 வருடங்களில் தாய்லாந்து 21 பிரதம மந்தி ரிகளையும், 17 புரட்சிக ளையும் கண்டு விட்டாலும், ஆட்டம் காணாமல் இருக் கிறார். இந்நாட்டின் மன்னர் "BHUMIBOL ADULYADEI" ஒரு நாட்டை மிக நீண்ட




காலமாக ஆளும் மன்னர் என்ற பெருமை, இந்த 68 வயது அரசரையே சேருகின் றது!
இவருடைய 50 வயது ஆண்டு ஆட்சி நிறைவை, அதாவது பொன்விழாவை அண்மையில் பிரமாதமாகத் தாய்லாந்தில் கொண்டாடி இருக்கிறார்கள்.
மாஜி பிரதம மந்திரி ஒரு வர், 'மன்னர் எம்முடன் இல்லையென்றால் நாம் இன்று இந்த நிலைக்கு வரவே வழியில்லை" என்று அடித்துக் கூறுகிறார்.
கொடுத்து வைத்தவர் மன் னரா? மக்களா?

## அம்மாவாகிவிட்ட அடக்கமோ?

அம்மம்மா...
எப்படியெல்லாம் காலம், சூழல் மனிதர்களை அடி யோடு மாற்றி விடுகின்றன?
நிர்வாணப்படங்களில் நடித்து, பாடும்போது மேடையில் படுகவர்ச்சியா கக் காட்சி தந்த இத்தாலி யின் பிரபல்ய பாடகி மடோனா நன்றாகத்தான் மாறிப்போய் விட்டார்.
அம்மாவாகிவிட்ட இவர் (மன்னிக்க வேண்டும் பிள் ளையை வயிற்றில் சுமந்து கொண்டிருக்கிறார்) அடக்க ஒடுக்கமாக பொது ஜனங்க ளிடையே வலம் வருவது பலரை வியப்புக்கு உள் ளாக்கி இருக்கிறது.
அவரா இவர் என்று அதிச யிக்கிறார்கள். கொஞ்சம் அப்படி இப்படி உடுத்தி னாலும் முணுமுணுக்கிறார் கள். அடக்கமாக வந்தா லும், ஆச்சரியத்தை வெளிப் படுத்துகிறார்கள்.
மகாஜனங்களே திருந்த விடுங்களேன்!



## மீண்டும் புத்தன் பிறந்தால்...



புத்தன் செய்தான் எல்லோ ருக்கும் போதனை.
அவன் வழிவந்தோரால் ஈழத் தில் சோதனை.
அதனால் தமிழ் இனத் திற்கோ பெரும் வேதனை.
அதை வென்று படையுங்கள் சாதனை.
என்று எமக்கு கூறிடுவான் நற் போதனை!

-நடிப்பு: ராகேஸ், சுவிஸ்-

# கண்ணே! எனை மறந்து விடியலுக்கு வித்தாகு!

(நண்பனின் நாட்குறிப்பிலிருந்து...)

* தென்னங்குருத்து மரணிக்க
வீதியெங்கும்
தோரணக் குழந்தைகள்...

* தேசத்தின் சோகப் பிரகடனத்தை
வானுக்கு ஏற்றுமதி செய்த
ஒலி பெருக்கிகள்...

* விடியலின் வித்துக்களாய்
தெருவோரங்களில்
புதிதாய் முளைத்து
கண்ணீர் சிந்திய
"திடீர்" வாழைகள்...

* புல்லின் இதழ் நுனியில்
கூடு கட்டிய
குருதித் துளிகள்...

* கண்ணீர், ரத்தம், சோகம், ...
இவற்றினுள்
புதைந்து கிடந்த
வன்னி மண்...


* மரணித்த வீரர்களுடன்
இரத்தத்தில் குளித்த
நானும் - எனது
தோழர்களும்...

* கண்ணே!
நினைவு இருக்கிறதா?
அன்றுதான் - உனக்கு நானும்
எனக்கு நீயும்
அறிமுகமானோம்.

* அதே கிழமை
அன்னிய இராணுவ மோதலில்
சிதைந்த காலின்
சதைகளைப் பொத்தியபடியே
தவண்டு... தவண்டு... வந்து
உன் வீட்டுத் திண்ணையில்
மயங்கிக் கிடந்தேன்.

* நினைவு இருக்கிறதா
கண்ணே!

* அன்னிய இராணுவத்தினர்
எறும்பாய்ச் சூழ
வாழைக் குலையுடன் - என்னையும்
குழியினுள் தள்ளி



வைக்கோல் போட்டு, ...
புகை அடிப்பதாய் நடித்தாயே!

* நினைவு இருக்கிறதா
கண்ணே!

* அதே... நான்... நான்தான்
இன்றும் ஊனத்துடன்
ஐரோப்பிய நாடொன்றில்
அரசுப் பிச்சையில்
அமுந்திக் கிடக்கிறேன்.

* திகைக்காதே!
எனைத் தேடுவதை
இன்றுடன் நிறுத்திவிடு!

* வைத்தியம் செய்ய
அயல் நாடு
வந்த நான் - என்
உறவுகளால்
"மூளைச்சலவை" செய்யப்பட்டு
ஐரோப்பாவிற்கு
நாடு கடத்தப்பட்டதை - நீ
அறியாய்.

* நீ
என்மீது கொண்ட
காதலும், நேசமும், அன்பும்
உண்மையானால்
கண்ணே!,
"எனை மறந்து
விடியலுக்கு வித்தாகு!"
இல்லையேல்
ஈழத்தாயும் எனைப்போல்
ஊனமுற்று விடுவாள்.

**தேடல் - 16      ரமேஷ் வவுனியன்**

# இளைஞர் களம்!

## -மொழிகளுடன் ஓர் போராட்டம்!-

அண்மையில் நடந்த ஓர் உண்மைச் சம்பவம் இது.

ஜேர்மனிக்கு வந்து ஆறு மாதங்களாகிவிட்ட இரண்டு இளைஞர்கள் கடைக்குச் சென்றிருக்கிறார்கள். அங்கே பலதரப்பட்ட அழகான பெட்டிகளில், ரின்களில் அடைத்து வைக்கப்பட்டிருந்த உணவுப்பொருட்களைக் கண்டதும், என்ன, ஏது, எவ்வளவு காலத்திற்கு இன்னும் இதை வைத்துப்பாவிக்கலாம், எவற்றால் தயாரிக்கப்பட்ட உணவு இது, எந்த நாட்டில் தயாரிக்கப்பட்ட உணவு இது போன்ற கேள்விகளுக்கு இவர்களால் பதில் அறிய முடியாமல், கண்டதையும் வாங்கினார்கள். காரணம் -மொழிப் பிரச்சனை!

பெட்டிகளில், ரின்களில் என்ன தான் எழுதியிருக்கிறது என்பதை வாசிக்கத் தெரியாது. மற்றவர்களிடம் கேட்பதற்கும் ஜேர்மன் மொழியை சரியாக பேசத்தெரியாது.

**'வீட்டில நாய் ஏதாவது புதிதாக வாங்கி வளர்க்கிறீர்களா?'**
**'இல்லை ஏன் கேட்கிறீர்கள்?'**
**அங்கிருந்த ஒரு வெறுமையான ஒரு பெட்டியை எடுத்துக்காட்டி-**
**'இது இங்கு நாய்களுக்கு உணவாக கொடுக்கும் இறைச்சி. இதையா நீங்கள் சமைத்துச் சாப்பிட்டுவிட்டு இருக்கிறீர்கள்'**
**என்று பரிதாபத்தோடு கேட்டார் அந்த நண்பர்.**

வாங்கிய சமையல் சாமன்களை வீட்டில் கொண்டு சமைத்துச் சாப்பிட்டார்கள். தற்செயலாக அங்கு சென்ற நன்கு மொழி தெரிந்த நண்பர் ஒருவர் அங்கிருந்த ஒரு பெட்டியைக் கண்டுவிட்டு, 'வீட்டில நாய் ஏதாவது புதிதாக வாங்கி வளர்க்கிறீங்களா?' என்று கேட்டார். 'இல்லை, ஏன் கேட்கிறீர்கள்' என்றார்கள்.

அங்கிருந்த ஒரு வெறுமையான பெட்டியை எடுத்துக்காட்டி 'இது இங்கு நாய்களுக்கு உணவாக (Pedigree Pal) கொடுக்கும் இறைச்சி, இதையா நீங்கள் சமைதுச் சாப்பிட்டுவிட்டு இருக்கிறீர்கள்' என்று பரிதாபத்தோடு கேட்டார்.

புதிதாக இங்கு வந்த நீங்கள் தபாற்கந்தோருக்கு போகவேண்டும். தெருவில் யாராவது ஜேர்மன்காரர்களிடம் 'தபாற்கந்தோர் எங்கிருக்கிறது?' என்று தமிழில் கேட்டால் அவன் உங்களைப் பார்த்து சிரிக்க மாட்டானா? இந்த நாட்டில் வாழ வேண்டுமானால் இந்த நாட்டு மொழியை படித்தே ஆகவேண்டும்.

வைத்தியரிடம் போகின்றீர்கள், அங்கே வைத்தியர் கேட்கிறார் உடம்புக்கு என்ன என்று, உங்களால் உங்கள் சுகவீனத்தை விபரிக்க முடியாது. காரணம் மொழி தெரியாது.

நான் அறிந்த இன்னொரு சம்பவம்: ஜேர்மன் நாட்டு குடியுரிமை (Citizen) எடுப்பதற்கு, (இந்த நாட்டிலேயே நீங்கள் வாழ்வதென்றால் இந்நாட்டு மொழி மிகவும் அவசியமல்லவா?) இங்கே ஒரு சிறிய பரீட்சை எழுத வேண்டும். ஒரு தம்பதிகள் பரீட்சை எழுத போயிருக்கிறார்கள். அங்கு 'உருளைக்கிழக்கு' பற்றி பத்து வரிகள் ஜேர்மன் மொழியில் எழுதச் சொன்னார்கள். மனைவியால் எழுத முடிந்தது. ஆனால், கணவனால் தினமும் சாப்பிட்டு வரும் உருளைக்கிழங்கைப் பற்றி எழுத முடியவில்லை. அதனால் மனைவிக்கு குடியுரிமை கிடைத்தது.

பரிதாபம் கணவனுக்கோ ஜெர்மன் படிப்பதற்கான பாடசாலை ஒன்றின் முகவரிதான் கிடைத்தது.


இன்னும் சில பெற்றோர்களால் தங்கள் குழந்தைகள் பாடசாலை பாடங்களில் ஏதாவது சந்தேகங்கள் இருந்து கேட்டால், இவர்களால் குழந்தைகளுக்கு உதவி புரிய முடியாத பரிதாப. நிலை காரணம் -குழந்தை அளவிற்கு இவர்களுக்கு மொழி தெரியாமையே காரணம்.

இன்னும் சிலருக்கு சட்டத்தரணிகளிடமிருந்து வரும் கடிதங்களையோ, மற்றைய கடிதங்களையோ வாசித்து விளங்க முடியாமல் (உதவி தேடி) ஓடித்திரிவார்கள்.

இனி இங்கேதான் என் வாழ்க்கை என்று முடிவெடுத்த பின்பாவது, இந்த நாட்டு மொழியை படிப்பதில் கொஞ்சம் அக்கறை காட்டுங்களேன். இதனால் நல்ல ஒரு தொழிலைத் டேடி எடுத்துச் செய்யலாம், வெள்ளைக்காரர்களிடம் அடிமைப்படுவதை தவிர்த்துக் கொள்ளலாம், வாழ்க்கையில் இன்னும் எவ்வளவையோ இலகுவாக்கிடலாம்.....

**-ரஞ்சினிப்பிரியன்-**

## சிந்திக்க வைக்கும் சித்திரம்!



சூரியக் கதிர் கொண்டு
சுட்டெரித்து விட்டோமென்று
மார்தட்டி நின்றோரே...
ஆர்ப்பரித்தெழுந்து வந்த
'ஓயாத அலைகள்' கண்டு
ஆடிப் போயிருப்பீரே!

மடிப்பிச்சை வாங்கி நீர்
மறைத்து வைத்த ஆயுதத்தை
அள்ளி அவர் சென்றதனால்
அதிர்ந்து போய் விட்டீரோ?
எத்தனை உடல் என்று
எண்ணிக்கை வைத்தீரோ!
அள்ளிச் சேர்த்ததனால்
அதிலும் பிழைதானோ?
பொறுத்திருந்து பாரும்
பேரலைகள் இன்னும்
புறப்பட்டு வரும்- இப்படியில்லை
இதைவிட உக்கிரமாய்!
ஆனாலும்.....
சொல்லும் போதே ஓர் நெருடல்!
எதிரியாய் வீழ்வதும்
ஓர் மனித உயிர்தானே!
அங்கும் ஓர் தாய் அரற்றுவாள்!
இளம் மனைவி... தன்
கொழுநன் உடல் காணாது
தலையிலடித்து ஒப்பாரி வைப்பாள்!
போன தந்தைதனைப் பார்த்து
வீதியோரம் குழந்தை,
விளையாட்டுப் பொருளிற்காய்
காத்து நிற்கும்!
கூடும் கும்பல் கண்டு
ஏதும் புரியாது விழி பிதுங்கி
ஓரமாய் நின்று விசும்பும்!

இப்படியே இப்படியே
எத்தனை முற்றங்கள்
பந்தல் கட்டும்!
ஆனாலும்.... என் கண்ணா
நீதானே சொன்னாய் கீதையிலே அன்று!
ஆதலால் வேண்டுகின்றேன்,
வெற்றிகள் எம்பக்கம்
இன்னும் வர வேண்டும் என்று!

-கனடாவிலிருந்து - செ. ஜெயச்செல்வி-

# வளர்ந்து வரும் விஞ்ஞானமும், ஆயுதக் கலாச்சாரமும்!

இயற்கையால் உருவான இந்த உலகம் இன்று பல கோணங்களாக சிதைக்கப் பட்டுக்கொண்டிருக்கிறது. துரித வேகமாக வளர்ந்து வரும் விஞ்ஞானம் உலகில் பெரும் மாற்றங்களை கொண்டுவந்துள்ளது. மனித சமுதாயத்தின் சிந்தனைகளை திசைதிருப்பிக்கொண்டிருக்கின்றது. மக்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் இயந்திர சாதனங்களை உற்பத்தி செய்வதைவிட, இவ்வுலகையும் உயிர்களையும் அழிப்பதற்கு பலவகை ஆயுதங்களை உருவாக்கிக் கொண்டிருக்கின்றது.

ஒரு நாட்டு மக்களுடைய சுயநிர்ணய உரிமைகளை பறித்தெடுப்பதும், சிறுபான்மையினத்தை அழித்து பெரும்பான்மையினர் ஆட்சி செய்வதுதான் தற்கால வழக்கமாகிவிட்டது. இனரீதியான ஒடுக்குமுறைகள், பொருளாதாரத்தடைகள் இவற்றுக்கு மேலாக -உயிரிழத்தல், உடல் அங்கவீனமடைதல், சொந்த உறைவிடங்களைவிட்டு அகதிகளாக விரட்டப்படுதல் இது போன்ற பல தாக்கங்களுக்கு உட்பட்டு சிறுபான்மையினர் வாழவேண்டிய நிர்ப்பந்தத்தை ஆயுதக்கலாச்சாரம் உருவாக்கியது.

நாடுகள் அணுஆயுத உற்பத்திகளிலும், பரிசோதனைகளிலும் துரிதவேகமாக ஈடுபட்டுள்ளன. பலவகை எதிர்ப்புகளுக்கும் ஆர்ப்பாட்டங்களுக்கு மத்தியுலும் சற்றும் மனிதாபிமானமில்லாமல் பிரான்ஸ் பலவகை அணுஆயுத பரிசோதனைகளை அண்மையில் நடாத்தி வெற்றியும் கண்டுள்ளது. இது வளர்ந்து வரும் விஞ்ஞானத்திற்கு ஒரு எடுத்துக் காட்டாகவும், ஆயுதக்கலாச்சாரத்திற்கு ஒரு சவாலாகவும் உள்ளது.

ஆபிரிக்க நாடுகளான எத்தியோப்பியா, சோமாரியா, உகண்டா, புருண்டி போன்ற பல நாடுகளில் வாழ்கின்ற மக்கள் வயிற்றுப் பசி தீர்க்கவே வழியின்றி இறந்து கொண்டிருக்கின்றார்கள். இதற்கு முக்கிய காரணம் அங்கு நடந்து கொண்டிருக்கும் வன்முறைகள் தான். ஏகாதிபத்தியத்தை எதிர்த்து போரிடுவதற்கு ஆயுதம் தேவைதான். ஆனால், அதே ஆயுதத்தால் அப்பாவி மக்களை அழித்தொழிப்பதில் என்ன பயன்? இந்நிலை தொடருமாயின் இந்த உலகம் இயற்கையால் அழியப்போவதல்ல...

அராஜகத்தின் பல விளைவுகளாலும், நாசகார ஆயுதங்களாலும் தான் அழியப் போகின்றது என்பது திண்ணம். விஞ்ஞானம் வளர்ந்து கொண்டு போகின்ற வேகத்தைவிட இன்று ஆயுதக்கலாச்சாரம் வளர்ந்து விட்டது. தர்மத்தையும் நீதியையும் அழித்து அநீதிக்கு வழிவகுத்து விட்டது. இந்நிலை தொடருமாயின்... வன்முறைகளையும், அழிவுகளையும் கட்டுப்படுத்த முடியாது. பொதுவாக உலகை அமைதியாக்கவே முடியாது!

**விஞ்ஞானிகள் துருப்பிடித்துப்போன இரும்பினை உருக்கி ஆயுதத்தை உருவாக்கினார்கள். அது இன்று உன்னதமான மனித உயிர்களையும் உடமைகளையும் அழிப்பதற்கு வழி வகுக்கின்றது!**



உலகப் புகழ்பெற்ற புகைப்படம் இது! 1967 - ல் நைஜீரியா ஆங்கிலேயர்களிடமிருந்து சுதந்திரம் பெற்றபோது நடந்த உள்நாட்டுக் கலவரத்தில் விளைந்த பஞ்சத்தை விளக்குகிறது படம். குழந்தைக்குப் பால் கொடுக்கும் பெண்ணின் வயது 24.

ஜெர்மனியிலிருந்து - கொய்யை த. தமிழ்க்கண்ணன்

இருபத்தியொராம் நூற்றாண்டுக்குள் விஞ்ஞானம் ஆயுத உற்பத்தியில் மிகப் பெரிய வளர்ச்சி கண்டுள்ளது. இதனால் உலக நாடுகள் அனைத்திலும் ஆயிதக் கலாச்சாரம் பரந்து கொண்டிருக்கின்றது. அன்றாட வாழ்க்கைத்தேவைகளைக் கூட பூர்த்தி செய்ய முடியாத நிலைக்கு மனித சமுதாயம் தள்ளப்பட்டுவிட்டது. இன்று பல நாடுகளில் நடந்துவரும் போர்களாலும், வன்முறைகளாலும் மனித இனம் மட்டுமன்றி ஏனைய உயிர்களும் அழிந்து கொண்டிருக்கின்றது!

விஞ்ஞானிகள் துருப்பிடித்துப்போன இரும்பினை உருக்கி ஆயுதத்தை உருவாக்கினார்கள். உன்னதமான மனித உயிர்களையும் உடமைகளையும் அழிப்பதற்கு அது வழிவகுத்தது. ஒரு நாட்டு மக்களன்றி இன்று உலக மக்கள் அனைவருமே ஆயுதக்கலாச்சாரத்தால் அழிந்து கொண்டிருக்கின்றார்கள்.

அன்று ஜப்பானிய நகரங்களின் மீது போடப்பட்ட அணுகுண்டின் தாக்கம் இன்றுவரை உலகை உலுக்கிக் கொண்டிருக்கின்றது. அப்படியிருந்தும் பல வல்லரசு நாடுகள் அணுஆயுத உற்பத்திகளிலும், பரிசோதனைகளிலும் ...



# லக்சுமி ஆசியன் மாளிகை

உங்களுக்குத்தேவையான இலங்கை, இந்திய உணவுவகைகள், மரக்கறிகள் மற்றும் கடல் உணவுப்பொருட்கள், குழந்தைகள், பெரியவர்களுக்கான ரெடிமேட் ஆடைகள், 22 கரட் தங்க நகைகள் நீங்கள் விரும்பிய வண்ணத்தில் பெற்றுக்கொள்ளலாம். மற்றும் புதிய, பழைய திரைப்படங்கள் வாடகைக்கும், விற்பனைக்கும் உண்டு. தரமான ஓடியோ, சீடிக்கு எம்மை நாடுங்கள். காஸ் அடுப்புகளும், சமையல் பாத்திரங்களும் வாடகைக்கு தரப்படும்.

-Huetten Platz 20 - 22, 35683 Dillenburg, Tel: 02771/6585 & 02778/2148, Fax: 02771/6508-

# உலகில் தமிழர்கள்

## மணிவிழாக் கண்ட சி. காராளபிள்ளை




அகிலம் போற்றும் ஆசிரியப்பணியில் அரும் பெரும் சேவையாற்றி, பல்லாயிரக்கணக்கான மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்த ஆசிரியர் திருமிகு. சி. காராபிள்ளை அவர்களின் 60 வயது பூர்த்தியை முன்னிட்டு, பாரீஸ் வாழ் கலைஞர்கள், அறிஞர்கள், நண்பர்கள், மாணவர்கள் அனைவருமாக இவரைக்கௌரவிக்கும் முகமாக, இவரின் மணிவிழாவினைச் மிகச் சிறப்பாக கொண்டாடினார்கள்.

சுமார் 600 பேர் கலந்து கொண்ட இவ்விழாவில் 'ஈழநாடு' ஆசிரியர் எஸ். எஸ். குகநாதன், 'தமிழன்' ஆசிரியர் காசிலிங்கம் அவர்கள் இவரின் பணியை வாழ்த்தி உரையாற்றினார்கள்.

இவ்விழாவை சிறப்பிக்கும் முகமாக, பாரீஸ் 'ஈழநிலா' இசைக் குழுவினரும், பிராங்பேர்ட் 'தமிழ் மன்ற' இசைக்குழுவினரும் இசைமழை பொழிந்தார்கள். அத்தோடு ஒரு அழகிய வண்ண 'மணிவிழா மலர்' ஒன்றையும் அன்றைய தினம் வெளியிட்டார்கள்.

## சுவிற்சலாந்து அருள்மிகு ஸ்ரீ சிவசுப்ரமணியசுவாமி கோவில் மஹாகும்பாபிஷேக விஞ்ஞாபனம்.



சுவிற்சலாந்து திச்சேனா மாநிலத்தில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ சுப்ரமணியசுவாமி கோவில் மஹாகும்பாபிஷேக விஞ்ஞாபனம் 21. 08. 96 அன்று ஆரம்பித்துள்ளது.

21. 08. 96 தொடக்கம் 01. 09. 96 வரை நடைபெறும் இவ்விஞ்ஞாபனத்தில் பக்தர்கள் அனைவரும் ஆலய தரிசனம் செய்து, பிறவிப் பெரும்பயன் பெற்றுய்யும் வண்ணம் பணிவன்புடன் வேண்டப்படுகிறார்கள்.

* ஆலயத்திற்கு வரும்வழி- MENDRISIO புகையிரத நிலையத்திலிருந்து STABIO விற்கு வந்தபின் Via Gaggiolo எனும் பிரதானபாதையில் இடதுபுறமாக வரும் முதலாவது AGIP பெற்றோல் நிலையத்திற்குப் பின்புறம். முகவரி:

Via Gaggiolo 35, 6855 Stabio Switzerland.

தொடர்புகளுக்கு - திரு. ந. தம்பிநாதன். தொலைபேசி: 091. 858 21 75.

## வெஸ்ரவால்ட் தமிழ்க்கலை மன்றம் நடாத்திய திரையிசை நடனப்போட்டி

06. 07. 96 அன்று ஐரோப்பா ரீதியிலான திரையிசை நடனப்போட்டி ஒன்றினை வெஸ்ரவெல்ட் தமிழ்க் கலை மன்றம் நடாத்தி முடித்தனர். இதில் வயதிற்கேற்ப மூன்று பிரிவுகளாகவும், தனி நடனம், ஜோடி நடனம், குழு நடனம் எனவும் பிரித்து நடாத்தப்பட்டது. இதில் றெக்கிலிங் ஹவ்சன் (RECKLINGHAUSEN) வண்ணத்துப் பூச்சிகள் நடனக்குழு எல்லாவகையிலும் முதலாம் இரண்டாம் மூன்றாம் பரிசில்களைப் பெற்று முன்னணியில் திகழ்ந்தனர். இங்கு ஜெர்மனியிலும் பிரான்ஸிலும் தலைசிறந்த நடனக்கலைஞர்கள் பங்குபற்றியதும் குறிப்பிடத்தக்கது.



படத்தில் இடமிருந்து வலமாக- பென்ஸ்ரஸ், அனோல்ட், அன்ரனி, பின்வரியில் இடமிருந்து வலமாக-கிளிற்றஸ், பிரியா, டெனிஸ் ஆகியோரைக்காணலாம்.

G. P. தேவா

## விளக்கம் தேவையில்லைத்தானே!



## "இளைஞன்" சந்தாதாரர்கள் கவனத்திற்கு!

ஐரோப்பாவில் இளைஞன் சந்தாதாரர்களாக விரும்புவோர், எமது பிரதிநிதிகளுடன் தொடர்பு கொள்ளவும். சகல நாடுகளுக்கும் 30 DM மட்டுமே!

- சுவிற்சலாந்து - P. சந்திரன் Tel: 061/ 46 21 30 2
- பிரான்ஸ் - வண்ணை தெய்வம் Tel: 48 67 01 25
- லண்டன் - சிவம் - பரமலிங்கம் Tel: 0181/ 90 28 20 8
- கொலண்ட் - J. S. ஞானமுத்து Tel: 045/ 52 42 90 3
- டென்மார்க் - S. செல்வன் Tel: 86 41 66 32




GERMANY சேகர் ஆட்ஸ்
SEGAR ARTS
(Commercial Artist)

திருமண வாழ்த்து மடல்கள், விளம்பர அறிவிப்புப் பலகைகள், கோயில் திரைச் சேலைகள், உருவப் படங்கள், மற்றும் சகல விதமான ஓவிய வேலைகளுக்கும், திருமண, பூப்புனித நீராட்டு விழா அழைப்பிதழ்கள் போன்ற சகலவிதமான அச்சுப்பதிப்பு வேலைகளுக்கும் தொடர்பு கொள்ளுங்கள்: தொலைபேசி: 069-704439 தொலைநகல்: 069-775669 (சனி ஞாயிறு தவிர்ந்த நாட்களில் மாலை 6 மணிக்குப் பின்னர்)

# அறிவியல் உலகம்


சனி கிரகத்திற்கு மட்டும் 18 சந்திரன்கள் இருப்பதாக இதற்கு முன்பு தெரியவந்தது. இப்போது 'ஹப்பில் ஸ்பேஸ் டெலஸ்கொப்' மூலம் சனிக்கிரகத்தை ஆராய்ந்தபோது மேலும் இரண்டு புதிய சந்திரன்கள் இருப்பது தெரியவந்துள்ளது. வாயேஜர் என்ற விண்கலம் 1980 கண்டுபிடித்த 'அட்லஸ் புரோமி தீயஸ்' இவைகளாகத்தான் இருக்கும் என்று அரிசோனா விஞ்ஞானிகள் கூறுகிறார்கள்.

## 'மோ' பறவைகள்


அளவு

நியூசிலாந்தில் 'மோ' என்ற ராட்சத பறவை இனத்தைச் சேர்ந்த பறவைகள் 200 வருடங்களுக்கு முன்பு வாழ்ந்து வந்திருக்கிறது. இவை ஏறக்குறைய மூன்று மீட்டர் உயரம் வரை வளரும். அதாவது உங்களைப் போல இரு மடங்கு உயரம். இந்தப் பறவைகளை நியூசிலாந்தின் பழங்குடிகளான 'மவுரி' இன மக்கள் வேட்டையாடி கொன்றுவிட்டார்கள். எதற்காக? உணவுக்காகத்தான். 13 வகையான 'மோ' பறவைகள் இருந்தன. இப்போது இவற்றில் ஒன்றுகூட உயிரோடு இல்லை!

மேலை நாடுகளில் ரோபோவை பயன்படுத்தி அறுவை சிகிச்சை செய்யும் புதிய விஞ்ஞான நுட்பம் ஆரம்பமாகி விட்டது. பல அடிப்படை சோதனைகளை செய்தபின் சமீபத்தில் மிலன் நகரில் ஒரு ரோபோ அறுவை சிகிச்சை செய்ய அனுமதிக்கப்பட்டது? மனித முயற்சியால் செய்யப்படும் அறுவை சிகிச்சையை விட மிகவும் துல்லியமாக ரோபோ செய்து முடித்திருக்கிறது. வருங்காலத்தில் பிரச்சினைக்குரிய பல கடினமான அறுவை சிகிச்சைகளைக்கூட ரோபோ மூலம் செய்து விட முடியும் என்கிறார் இதைக் கண்டுபிடித்த மருத்துவர்.




**தகவல்: ராஜி ராதா**





தலைவர்களை போற்றும் விதத்தில் அவர்கள் உருவம் பொறித்த ஸ்டாம்புகளை வெளியிடுவது வழக்கம். இங்கிலாந்தில் 1533-ம் ஆண்டு பிறந்த முதலாம் எலிசபெத் மகாராணி ஒரு ஸ்டாம்பில் இடம்பிடிக்க முன்னூறு ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டது. இவருடைய ஸ்டாம்பு 1968-ம் ஆண்டுதான் அதிகாரப்பூர்வமாக வெளியிடப்பட்டது. இந்த ராணியை அந்தக் காலத்தில் இருந்த அவர் நாட்டு மக்களுக்கே சரியாகத் தெரியாது. மிகவும் பயந்த சுபாவம் உள்ளவர். அவருடைய உறவினரான மேரி என்பவருக்கு சிரச்சேதம் செய்யும் தண்டனையை விதித்து நடுங்கிக் கிடந்த ராணி, வாழ்க்கையில் நிமிர்ந்த தோற்றத்தோடு காட்சியளிப்பது இந்த ஸ்டாம்பில் மட்டும்தானாம்.

## தொலைக்காட்சி!



தொலைக்காட்சியை அதிகம் பார்ப்பவர்கள் நடுத்தர வர்க்கத்தினர்தான். இவர்கள்தான் செய்தித்தாள்களை ஒரு நோட்டம் விடுகிறார்கள். வானொலியை ஊறுகாயை தொட்டுக் கொள்வதுபோல அவ்வப்போது கேட்டுக்கொள்கிறார்கள். ஆனால், தொலைக்காட்சி முன்போ மலை போல நிமிர்ந்து உட்கார்ந்து கொள்கிறார்கள். இப்படி இங்லாந்தில் ஜானத் ஸ்டிரிடப் போர்ட்டர் சர்வே எடுத்து கூறியுள்ளனர்.

## படுத்துக்கொண்டே பயணம்



பிரிட்டிஷ் ஏர்வேய்ஸ் ஒரு புதிய வசதியை விமானங்களில் செய்ய திட்டமிட்டுள்ளது. விமானத்தில் உள்ள நவீன இருக்கைகளில் ஒரு பட்டன் இருக்கும். அதைத் தட்டியதும் இருக்கை சொகுசுள்ள வசதியான படுக்கையாகிவிடும். பாதுகாப்பாக அமைக்கப்பட்டுள்ள இந்த சொகுசு படுக்கையில் எந்த பிரச்சினையும் ஏற்படாமல் வசதியாக படுத்துக்கொண்டே போகலாம்.

# இறுதி அத்தியாயம்
# சங்கரி



- குஞ்சம்மா -

நாட்களின் வேக ஓட்டத்தில் சங்கரி நினைத்தபடி எல்லாமே நல்லபடியாக நடந்து முடிந்து கொண்டிருந்தது. காலை 9மணியில் இருந்து பிற்பகல் 6மணிவரை வேலை. காலையிலேயே பிள்ளைளுக்குச் சமைத்து வைத்து விடுவாள். பிள்ளைகள் வந்ததும் சாப்பிட்டு விட்டு விளையாடிக் கொண்டு இருக்குங்கள்.

ஆரம்பத்தில் வேறு ஒரு நண்பனுடன் தங்கி இருந்த சுதா சங்கரியின் வற்புறுத்தலாலும் பிள்ளைகள் ஆசைப்பட்டுக் கேட்டுக் கொண்டதாலும் ஒன்ருகவே இருக்கச் சம்மதித்தான். இரண்டு அறைகளில் ஒன்றில் சுதாவும் மற்றையதில் சங்கரியும் பிள்ளைகளுமாகத் தங்கிக் கொண்டார்கள். ஏஞ்சலாவுக்கு சுதாமீது கொள்ளை பிரியம். பாதி ராத்திரியில் சுதாவோடு போய் ஒட்டிக் கொண்டு படுத்து விடுவாள். சங்கரியும் பேசாமல் விட்டு விடுவாள். சங்கரி சமைக்கும் போது சுதாவுக்குமாகச் சேர்த்தே சமைப்பாள். அதற்குப் பதிலாக சுதா சங்கரியிடம் வாடகைப் பணத்தை வாங்க மறுத்து விட்டான்.

சுதாவோடு இருப்பது தெரிந்து கண்ணன் இரண்டு மூன்று தடவை வந்து கூப்பிட்டுப் பார்த்தான். சங்கரி போக மறுத்து விட்டாள். விவாகரத்துக்கு ஏற்பாடு செய்த போது ஒரு வருடம் பிரிந்து வாழ வேண்டும் என்றும் அதன் பிறகு தான் விவாகரத்துக் கிடைக்கும் என்றும் லோயர் சொன்ஞன். அதன்படி ஒரு வருடம் பிரிந்து இருப்பதாகவும் அது வரை சுதாவோடு தங்குவதாகவும் முடிவெடுத்தாள் சங்கரி.

காலம் ஓடிக் கொண்டு இருந்தது. கண்ணனேடு வாழ்ந்த வாழ்க்கையை சங்கரி அடிக்கடி நினைத்துப் பார்ப்பது உண்டு. எவ்வளவு கசப்பான அனுபவங்கள். இதயத்தில் ஏற்பட்ட ரணங்களின் வடுக்கள் இன்னமும் மாற வில்லை. எத்தனை துன்பங்கள். எத்தனை ஏமாற்றங்கள்.. எத்தனை அடிபாடுகள்... எல்லாவற்றிற்கும் வெகு சீக்கிரத்தில் விடிவு காலம் வரப் போகின்றது. விவாகரத்துக்குப் பிறகு என்ன செய்வது?

ஒருநாள் சுதாவோடு கதைத்துக் கொண்டிருந்த போது.

"சங்கரி விவாகரத்துக்குப் பிறகு என்ன செய்யப் போறீங்கள்?"

"என்ன செய்யிறது சுதா இப்பிடியே வாழ்ந்து முடிக்க வேண்டியது தான். ஆறுதலுக்கு நீங்கள் இருக்கிறீங்கள். அன்புக்கும் ஆசைக்கும் பிள்ளையல் இருக்கு. வேலைக்கும் போய் வாறன். இதை விட இனி எனக்கு என்ன வேணும் சுதா?".

"இல்லை சங்கரி எவ்வளவு காலத்துக்கு இப்பிடித் தனிய வாழப் போறீங்கள்? ஆராவது உங்களையும் பிள்ளைகளையும் ஏற்றுக் கொண்டு உங்களுக்கு ஒரு நல்ல வாழ்க்கையை தர இருந்தா, அதை ஏற்றுக் கொண்டு பழசெல்லாத்தையும் மறந்திட்டு ஒரு புது வாழ்க்கையைத் தொடங்குங்கோ."

"எனக்கு இனி என்ன வாழ்க்கை சுதா? நான் பட்ட துன்பம் போதும். இப்ப என்ர இந்த வாழ்க்கை என்ர இந்த மூண்டு செல்வங்களுக்காகத் தான். அதுகளைப் படிப்பிச்சு ஒரு நல்ல நிலைக்குக் கொண்டு வந்தாக் காணும் சுதா."

"அதுக்குத் தான் சங்கரி உங்களுக்குத் துணை வேணும். எல்லாவற்றையும் தனிச்சு உங்களால சமாளிக்க முடியாது. அதாலதான் சொல்லுறன்."

சங்கரிக்கு சுதா மேல நல்ல அபிப்பிராயம் இருக்கு. அது அன்பா ஆசையா என்று சொல்லத் தெரியவில்லை. ஆனல் தன்னுடைய வரட்டுப் பிடிவாதத்தால தனக்குள்ளே முடங்கிக் கிடக்கின்ற எண்ணங்களுக்கு மூடி போட்டுப் பூட்டி வைத்திருந்தாள்.

சுதாவுக்கும் சங்கரி மீது நல்ல பிரியம் இருந்தது. சங்கரி ஒத்துக் கொண்டால் அவளையும் பிள்ளைகளையும் ஏற்றுக் கொண்டு அவளுக்கு ஒரு நல்ல வாழ்க்கையைக் கொடுக்கத் தயாரா இருந்தான். ஆனல் அவனும் வாய்திறந்து சங்கரியுடன் இதுபற்றிக் கதைக்க முடியாமல் இருந்தது. காரணம் உதவி செய்துவிட்டுப் பலனை எதிர்பார்ப்பதாக சங்கரி நினைத்து விடுவாளோ என்ற பயம் தான்.

ஆனல் காலம் என்ன முடிவு எடுத்திருக்கிறது என்பது எவருக்குமே தெரியாது. நாளை சுதாவும் சங்கரியும் சேர்ந்து வாழலாம். இல்லையேல் சங்கரி காலம் பூராவும் இப்பிடியே தனித்து வாழலாம். ஆனல் இனியும் இப்படி ஒரு சங்கரியை தோற்றுவிக்காதீர்கள் என்று இந்த ஆண் வர்க்கத்திடம் கேட்டுக் கொள்கின்றேன்.

முற்றும்.

# வெட்கம்



கடற்கரையோரமாக வெள்ளைக் கொக்கு ஒன்று ஒற்றைக் காலில் நின்றது.

அருகே நின்ற கறுத்தக் காகம் வெள்ளைக் கொக்கைக் கேட்டது-

"வெள்ளையே, வெள்ளையே ஒற்றைக் காலில் நிற்கிறாயே உனக்கென்ன பைத்தியமா?" என்று.

வெள்ளைக் கொக்கு ஒன்றுமே பேச வில்லை.

கறுத்தக் காகம் மறுபடியும் கேட்டது-

வெள்ளைக் கொக்குக்கு கோபம் வந்து சொன்னது-

"நான் தண்ணீரில் சிரமப்பட்டு மூழ்கி மீனைப்பிடிக்கின்றேன். நீயோ நான் மிச்சமாக போடும் எச்சிலைத் தின்னக் காத்திருக்கிறாய்" என்று.

கறுப்புக்கு வெட்கம் வந்து தலையைக் குனிந்தது.

"கையை நீட்டினாலும், வாயை நீட்டலாமா?"

-வை. யோகேஸ்-

படித்து விட்டீர்களா?

பூவரசு

ஈழத்தின் பிரபல எழுத்தாளர் இந்து மகேஷ் அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளிவருகிறது!

ஆடி — ஆவணி இதழ் சிறுகதை சிறப்பிதழாக வெளிவந்துள்ளது!

தொடர்புகளுக்கு:
POOVARASU
Sinniah Maheswaran
Otto Brenner Allee - 56
28325 Bremen
Germany.

10. 7. 96 -நெல்சன் மாண்டேலாவைப் ஆனந்தக்களிப்பில் ஆற்ற, அவரது பிரிட்டிஷ் விஜயத்தின்போது, பிரிட்டிஷ் அரசு, தெ. ஆபிரிக்க கல்வி வளர்ச்சிக்காக 93 மில்லியன் டாலர்கள் நிதிஉதவி வழங்கப்படும் என்று அறிவிக்கின்றது.

11. 7. 96 - சீனாவில் படுமோசமான வெள்ளம் 500 பேரின் உயிருக்கு சமாதி வைத்திருந்தாலும், பயிர் அப்படி ஒன்றும் மோசமாகப் பாதிக்கப்படவில்லை என்று கூறப்படுகின்றது.

12. 7. 96 - மீண்டும் (இரண்டாவது தடவையாக) Trolly Bus அருகே வெடிக்கும் குண்டு (மொஸ்கோ) ஒருவரைக் கொல்வதோடு, 22 பேரைக் காயப்படுத்துகின்றது.

15. 07. 96 - ஜப்பானிய நகரான SAKAI இல், மதிய உணவில் நஞ்சுச் செறிவு இருந்தமை காரணமாக, 92 அரச பாடசாலைகளின் 4000 பாடசாலைப் பிள்ளைகளின் உடல்நிலை பாதிக்கப்படுகின்றது.

16. 07. 96 - நெதர்லாந்து விமான விபத்திற்கு (32 பேர் கொல்லப்பட்டார்கள்) பறவை ஒன்று மோதியதே காரணம் என்று கூறப்படுகின்றது.

17. 07. 96 - முதல் 6 மாதத்தில் (இந்த வருடம்) கள்ளமாகக் கடத்தப்பட்ட 17.6 மெட்ரிக் தொன் போதை வஸ்தினைக் கைப்பற்றி இருப்பதாக லத்தீன் அமெரிக்க நாடான பேரு கூறுகின்றது.

18. 07. 96 - TWA போயில் விமானம் ஒன்று, புறப்பட்ட 15 நிமிடத்தில் 229 பயணிகளுடன் ஆகாயத்தில் வெடித்துச் சிதறுகின்றது.

18. 07. 96 - முல்லைத்தீவு இராணுவ முகாமின் மீது புலிகள் பாரிய அளவில் தாக்குதல் தொடுக்கிறார்கள்.

19. 07. 96 - பலஸ்தீனியர்கள், இஸ்ரவேலில் தொழில் புரிவதற்கான தடையுத்தரவு எதிர்வரும் ஞாயிறு நீக்கப்பட இருக்கின்றது என்று அறிவிக்கப்படுகிறது.

19. 07. 96 - கடந்த 13 வருட காலத்தில் இல்லாதவாறு புலிகளுக்கும், இராணுவத்திற்கும் இடையில் நடந்த சமரில் புலிகளின் செய்தியின்படி, 500 இராணுவ வீரர்கள் வரையில் கொல்லப்பட்டிருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது.

20. 07. 96 - புலிகள் தமது அறிக்கையில் 800 இராணுவ வீரர்கள்வரை கொல்லப்பட்டதாகவும், தமது பக்கம் 120 பேர் உயிர் துறந்ததாகவும் கூறுகிறார்கள்.

21. 07. 96 - 13 வருட காலத்தில் அரசுக்கு எதிரான யுத்தங்களில், புலிகளுக்கு முல்லைத்தீவு மோதலே பெரும் வெற்றியைக்

# இளைஞனின்

# டயறிக் குறிப்புகள்

## தொகுத்துத் தருபவர்: நாடோடி

கொடுத்திருப்பதோடு, 500 இராணுவ வீரர்களின் உடல்களை கையளிக்கத் தயாராக இருப்பதாகவும் அறிக்கை கொடுக்கப்படுகிறது.

22. 07. 96 - லாகூரின் விமான நிலையத்தில் உள்ள பழக்கடை ஒன்றில் குண்டு வெடிக்க, 7 பேர் கொல்லப்படுவதோடு, 20 பேர் வரையில் காயமடைகிறார்கள்.

22. 07. 96 - தமது 5 நாள் தீவிர போரில், முல்லைத்தீவின் முகாமில் இருந்த 1200 போர் வீரர்களைக் கொன்றிருப்பதாகத் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு கூறுகின்றது.

23. 07. 96 - பெருந்தொகையாக கொல்லப்பட்ட TUTSI இனத்தவர்களின் (340 பேர்) மரணச்சடங்குகளில் கலந்து கொள்ள ஹெலிஹெப்டர் மூலம் வந்த புருண்டி ஜனாதிபதி, பொதுமக்களால் கற்கள் வீசி விரட்டப்படுகிறார்.

24. 07. 96 - கொழும்புக்கு அருகே தெஹிவளையில் ரயிலில் குண்டு வெடித்து 67 பேர் கொல்லப்படுகிறார்கள். 450 பேர் காயமடைகிறார்கள்.

25. 07. 96 - புருண்டியில் ஆட்சிப்புரட்சி வெடித்து, பெரும் கலகம் நிகழ்கின்றது.

26. 07. 96 - MAJOR FORCE என்ற பெயரில் இலங்கை இராணுவம் கிளிநொச்சி பிராந்தியத்தைக் கண்மூடித்தனமாகக் தாக்குகின்றது.

27. 07. 96 - அட்லாண்டா (ஒலிம்பிக் நகர்) பூங்காவில் குண்டுவெடித்ததில் ஒருவர் கொல்லப்படுவதோடு பலர் காயமடைகிறார்கள்.

28. 07. 96 - 12 கைதிகளின் மரணத்தின் முடிவில், உண்ணாவிரதப்போராட்டம் துருக்கியில் ஒரு முடிவுக்கு வருகிறது.

29. 07. 96 - ஆயுதங்களை கொள்முதல் செய்து, யுத்தத்தைத் தொடர, இலங்கை அரசு ஏழை மக்களின் வயிற்றிலடித்து பாணினதும், மாவினதும் விலையை அதிகரிக்கின்றது.

29. 07. 96 - உலகின் மிக வயதாளியான NARAYA என்ற நேபாள நாட்டவர் (வயது 135) தாம் வாழ்ந்து களைத்து விட்டதாகவும், இறக்க விரும்புவதாகவும் கூறுகிறார்.

30. 07. 96 - இந்தோனேசிய இராணுவம், கிளர்ச்சியாளர்களைக் கண்ட இடத்தில் சுட்டுக் கொல்லும்படி சட்டம் பிறப்பிக்கின்றது.



இந்தோனிசியா ஆர்ப்பாட்டம்

31. 07. 96 - ஜப்பானில், 2 மாதத்தில் 9,000 பேரின் வாழ்க்கையைப் பாதித்த வைரஸ், மாட்டு ஈரலில் காணப்படுவதாகக் கூறப்படுகின்றது.

01. 08. 96 - ருஷ்யாவின் யுத்த விமானங்களை செச்சினியாவின் தெற்கு, கிழக்கு பிராந்தியங்களை படுமோசமாகத் தாக்குகின்றன.

02. 08. 96 - சோமாலியாவில் பல இரத்தக் களரிகளுக்கு காரணமான WARLORD FARAH AIDEED இன் இறுதி மரணச் சடங்குகள் இன்று இடம் பெறுகின்றன.

03. 08. 96 - இன்று மீட்கப்படும் 4 உடல்களோடு, போயிங் விமான விபத்தில் இறந்தோரில், மொத்தம் 188 உடல்கள் மீட்கப்படுகின்றன.

04. 08. 96 - தாண்டிக்குளத்தினூடாக வவுனியாவிற்கு மக்கள் பயணஞ்செய்ய இன்று இலங்கை இராணுவம் அனுமதிக்கின்றது.

05. 08. 96 - 26 வது ஒலிம்பிக் விளையாட்டு நிகழ்ச்சிகள், இன்று அட்லாண்டாவில் ஒரு முடிவுக்கு கொண்டு வரப்படுகின்றன.

06. 08. 96 - இதுவரையில் 320.000 பொஸ்னியர்களை அகதிகளாக ஏற்றுக்கொண்ட ஜெர்மனி, ஒக்டோபரில் இருந்து இனி இந்த நாட்டு அகதிகளை ஏற்பதில்லை என்று முடிவெடுக்கிறது.

07. 08. 96 - கிளிநொச்சிக்குள் புக முயலும் இலங்கை இராணுவத்தை புலிகள் மூர்க்கத்தனமாகத் தாக்குகிறார்கள்.

08. 08. 96 - செச்சினிய புரட்சிவாதிகள், ருஷ்யாவின் யுத்த விமானம் ஒன்றை சுட்டு வீழ்த்திவிட்டதாகக் கூறுகிறார்கள். ●

# ● உங்கள் 'இளைஞன்' ● தற்கொலையை நாடலாமா?

வாசகப் பேரரசர்களுக்கு வணக்கம்!

ஐரோப்பாவில் பத்திரிகை வெளியீடு என்பது மிகவும் சிரமமான பணி என்பதை தாங்கள் அறிந்ததே. பொருளாதார இலாபம் கருதி இம்முயற்சியை செய்ய முடியாது. ஏனெனில் இந்திய தமிழ் பத்திரிகைகளின் ஆதிக்கம்.

இந்திய பத்திரிகைகளுக்கு நிகராக எமது பத்திரிகையையும் வெளியிட்டு அதன் ஆதிக்கத்தை முறியடிக்க காலவிரயமும், பெரும் பணச்செலவும் இன்றியமையாதது ஆகின்றது. பொருளாதார இலாபம் இல்லாவிடினும் அதிகளவு நட்டம் அடையாமல் காப்பது பத்திரிகை வளர்ச்சிக்கு உறுதுணையாகும்.

தமிழ் மொழி மீது கொண்ட அடங்காத காதலாலும், ஈழக்கலைஞர்கள்பால் கொண்ட அக்கறையாலும் இப்பணியை செய்து வருகிறேன்.

இப்பணி புரியும் இந்த இளையவனைப்பற்றி சில வரிகள்; இவன் ஜெர்மனியில் அழகியற்கல்வி பயின்று வரும் மாணவன். பணம் ஈட்டல் என்பது இவனுக்கு சாத்தியமில்லை. எனக்குக்கிடைக்கும் மாணவ ஊதியத்தை ஊதாரிச் செலவுகள் செய்யாமல் மீதப்படுத்தியே 'இளைஞன்' பத்திரிகைக்கு ஆகும் செலவுக்கு பயன்படுத்துகிறேன்.

பலத்த பொருளாதார நெருக்கடியால், இதுவரையில் சுமார் 15,000 DM வரை இழந்து விட்டேன்.

இனியும் இது தொடருமானால், 'இளைஞன்' பத்திரிகை சந்தாதாரர்களின் பணத்தை திருப்பிக்கொடுத்துவிட்டு தற்கொலை தான் செய்து கொள்வான்.

வாசகர்களே! தொடர்ந்தும் இந்தப் பத்திரிகை வளரவேண்டுமானால், இளைஞனுக்கு உங்கள் உதவி மிகமிக அவசியமாகிறது.

உங்கள் குழந்தைச்செல்வங்களின் பிறந்ததின அழைப்பிதழ், திருமண அழைப்பிதழ்கள்-

மற்றும், தங்கள் உறவினர்களின் மரணச்செய்திகள், நினைவஞ்சலிச்செய்திகள், மற்றும் வியாபார ஸ்தாபனங்களின் விளம்பரங்கள் போன்றவற்றை தந்துதவி 'இளைஞன்' வளர்ச்சிக்கு உதவுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

அன்புடன் - ஆசிரியர் சேகர்.

* வாழ்க்கையில் சாதாரணமாக நடைபெறுகின்ற, யதார்த்தமான சம்பவங்களையெல்லாம் சிறுகதைகளாக படம் பிடித்து விடுவதில் கைதேர்ந்தவர் வண்ணை தெய்வம் அவர்கள். இவரின் சிறுகதைகளையெல்லாம் சேர்ந்து "சிறுகதைத் தொகுப்பு" ஒன்று விரைவில் வெளிவரவிருக்கிறது. அதிலிருந்து ஒன்று...

# எல்லாமே பணத்தில்தான்...

"எங்கையடி உந்த குத்தியன், காலங்காத்தாலை எழும்பி போட்டாராக்கும் விதானை வேலை பாக்க...ஆ!"
இது காலையில் அப்பா தனக்கு கொடுக்கும் அர்ச்சனை.
'என்ன மூப்பர் வந்து கொட்டிப்போட்டு போட்டாரே! அதிலை குறைவைக்க மாட்டாரே?' இது மத்தியானம் ஒரு போத்தில் கள்ளு குடிச்சிட்டு ஒரு மட்டான வெறியிலை அப்பாவின் வாயில் இருந்து வெளிவரும் அபிஷேக வார்த்தைகள்.
'விறுமசத்தி, இன்னும் கட்டைக்கு வரல்லையாக்கும். ஆ! உதுகள் கட்டறுத்த மாடுகள். நேரத்துக்கு நேரம் வந்து திண்டுபோட்டு போக மட்டும் தெரியுது. ஒரு நாலு காசு உழைக்க வேணும் எண்ட எண்ணம் இல்லை. ஏதோ காலம்பிறை எழும்பின உடனை கவுண்மேன்ற் உத்தியோகம் பாக்கிறவர் மாதிரி அந்த குழாய்க் களிசானைத் தூக்கி மாட்டிக் கொண்டு வெளிக்கிட்டிடுவார் பேந்து சாமத்திலை களட்டிறது.'
இது 'பு(F)ல்' வெறியிலை வந்து அப்பா இரவில் உதிர்க்கும் பொன்மொழிகள். இவை மட்டுமல்ல இன்னும் நிறைய உதிர்ப்பார் அவை வாயால் சொல்ல முடியாதவை.
அப்பா மட்டும்தானா அம்மாவும் விட்டுக்கொடுப்பதில்லை. ஆனால், அப்பாவைப் போல் இல்லை. தனக்கு மட்டும் கேட்கும்படியா மெதுவாக புறுபுறுத்துக் கொள்வாள்.
கலியாணம் முடித்த அக்கா மட்டும் குறைவா? புத்திமதி என்ற போர்வையில் அப்பப்ப குத்த கதைகள், அக்காவுடன் சேர்ந்து அத்தானும்தான்.
தங்கச்சி மட்டும் எதுவும் பேசுவதில்லை. அதற்காக அவளுக்கு என் மேல் பெரிய பாசம் என்று சொல்லிவிட முடியாது. அண்ணனை பேசுகின்ற அளவுக்கு வயது வரவில்லையோ என்னவோ?
இப்படி எல்லோருக்குமே வேண்டாதவனாகத்தான் இருந்தான் மோகன்.
அவனும் தான் என்ன செய்வான். படிக்காதவனாக இருந்தால் கூலிவேலைக்காவது போகலாம். A/L படித்து சித்தியடைந்த படியால் அவனால் கீழே இறங்கிவர முடியவர முடியவில்லை.
தன் படிப்பிற்கேற்ற வேலையை தேடிக்கொண்டிருந்தான்.
வேலையோ அவனுக்கு குதிரைக் கொம்பாக இருந்தது.
'உது இஞ்சை இருந்து உருப்படாது காலம் முழுக்க தண்டச்சோறாத்தான் முடியப் போகுது. இருக்கிற காணி பூமியை ஈடுவைச்செண்டாலும் எங்கையாலும் வெளிநாட்டுக்கு அனுப்பி விடுங்கோ. அங்கினேக்கை போய் உழுது பார்க்கட்டும்' இது வீட்டின் நிதி மந்திரி அம்மா, பிரதம மந்திரி அப்பாவுக்கு வழங்கிய மந்திராலோசனை.
இது என்ன அதிசயம் நம் நாட்டில் உருப்படாதவர்கள் எல்லோரையும் வெளிநாடுகளுக்கு அனுப்புவதா?
வெளிநாடுகள் எல்லாம் அவ்வளவு தரம் கெட்டா போய்விட்டது? மோகனுக்கு

நிழலும் நிஜமும்...

ஜெயக்குமார் - சுலோசனாதேவி (குஞ்சம்மா)
71 ¼ கலட்டி அம்மன் கோவில் வீதி
நாச்சிமார் கோவிலடி - யாழ்ப்பாணம்
பிரிந்த நாள்: 10. 09. 1992



மகளே மெலிண்டா...
நாங்கள் இருவரும்
ஒரே ஒரு முறை சந்தித்துக் கொண்டோம்!
ஒரே ஒரு முறை முத்தமிட்டுக் கொண்டோம்!
அந்த நினைவுகளுடனேயே
உன்னை விட்டு பிரிந்து விட்டேன்...
நான்கு வருடங்கள் கரைந்தது
எனக்கு தெரியவில்லை!
ஏனென்றால்,
நான் இன்னமும் உன் பக்கத்தில்தான்
இருக்கின்றேன்... உருவமின்றி...
உன்னை சுற்றிச் சுற்றி
வந்து கொண்டே இருக்கின்றேன்
அம்மாவின் பிறந்தநாள் வாழ்த்துக்கள்

இப்படிக்கு,
நிழலாகிப் போன உன்
அன்பு அம்மா குஞ்சம்மா.

அம்மா!
நீங்கள் என் அருகில் இல்லையே என்று
வருந்துகின்றேன்.. கலங்கவில்லை.. ஏன்?
இன்று எனக்கு இரண்டு அம்மா!
நீங்களும் பெரியம்மாவும்
இன்று எனக்கு இரண்டு அப்பா!
அப்பாவும் பெரியப்பாவும்
இன்று எனக்கு இரண்டு அக்கா!
தெய்சி அக்காவும், ஜென்சி அக்காவும்
இன்று எனக்கு இரண்டு அண்ணா!
சன் அண்ணாவும் கோணேஸ் அண்ணாவும்
இன்று எனக்கு இரண்டு தம்பி!
ஜெயா அத்தையின் ஜெறுமும்
நந்தினி அத்தையின் திஷாந்தும்
உங்களுக்கு சந்தோஷம் தானே...
நான் சந்தோஷமாக இருக்கின்றேன்
உங்களின் நினைவுகளோடு

என்னை வாழ்த்துங்கள்.
உங்களின் நிஜமான மகள்
மெலிண்டா ஜெயக்குமார்.



ஜெயக்குமார் மெலிண்டா- சுலோசனா
212, AV. DU. 8. Mai - 1945
93150. Blanc Mesnil
France
பிறந்த நாள் - 09. 09. 1992

எதுவுமே புரியவில்லை.

நாட்டில் நடக்கும் யுத்தத்தால் எவ்வளவோ பொருளாதார நெருக்கடி ஏற்பட்ட போதும், பக்கத்து நாடுகளில் எல்லாம் கடன் வாங்கி ஆயுதங்களை வாங்கிக்குவிக்கும் சந்திரிகா அரசாங்கம் போல, அப்பாவும் யார் யாரிடமோ கடன் வாங்கி என்னை வெளிநாட்டிற்கு அனுப்பி வைத்து விட்டார்.

இவையெல்லாம் நடந்து நான்கு வருடங்களுக்கு மேலாகிவிட்டது. இப்பொழுது மோகனின் நிலையே வேறு.

அன்று ஊரில் தன் படிப்பிற்கு ஏற்ற வேலை கிடைக்காததால் வேறு வேலைக்கே போகாத மோகன், இன்று தனது படிப்பிற்கு கொஞ்சமும் சம்பந்தமில்லாமல் 'றெஸ்ரோரன்ட்' ஒன்றில் கோப்பை கழுவுகிறான்.

அதனறாக இங்கு அவன் வெட்கப்படவில்லை. காரணம் மோகனைவிட அதிகம் படித்த அனேகமானவர்கள் அவன் வேலையை விட கீழான வேலையை செய்கின்றார்கள்.


இங்கு என்ன வேலை செய்கின்றார்கள் என்பதில் யாரும் பெரிதாக அலட்டிக் கொள்வதில்லை. ஏனெனில் என்ன வேலை செய்தாலும் அனேகமாக எல்லோருக்கும் ஒரே அளவான சம்பளமே கிடைக்கிறது.

உழைப்பில் ஒருவருக்கு ஒருவர் குறைந்தவர் அல்ல, "எங்கள் நாட்டில்தான் தொழிலால், படிப்பால், ஒருவருக்கொருவர் உயர்வு தாழ்வை ஏற்படுத்திக் கொள்கின்றார்கள், எங்கள் நாட்டில் உள்ள எல்லோரையும் குறைந்தது இரண்டு வருடம் வெளிநாட்டிற்கு அனுப்பி தொழிலால் எவரும் உயர்ந்தவர், தாழ்ந்தவர் இல்லை என்பதை புரிய வைக்க வேண்டும்" இது மோகனின் உயர்ந்த சிந்தனை.

அன்று வந்த கடிதங்களை படித்துக்கொண்டிருந்தான் மோகன். அவைகளுக்கு பதில் எழுத வேண்டும்.

'கண்ட பாட்டுக்கு வீண் செலவுகள் செய்யாதே... வீதியிலை திரிவதெல்லாம் கவனம்... அத்துடன் நான் ஒரு வீடு கட்டிக்கொண்டிருக்கிறேன்... கொஞ்சம் பணம் தேவை, அத்தான் தான் கேட்டதாகச் சொல்லி உனக்கு எழுதச்சொன்னார். கடனாகத்தான் கேட்கிறோம். பின்பு தருவோம்" இது அக்கா எழுயிருந்தது.

**'இது என்ன அதிசயம், நம் நாட்டில் உருப்படாதவர்கள் எல்லோரையும் வெளிநாடுகளுக்கு அனுப்புவதா? வெளிநாடுகள் எல்லாம் அவ்வளவு தரம் கெட்டா போய்விட்டது? மோகனுக்கு எதுவுமே புரியவில்லை!'**



"நான் வெளிநாடு வெளிக்கிடும் போது காசு வைத்திருந்தும் ஐந்து சதம் இல்லையென்று கையை விரித்தவர்கள், இப்பொழுது இதுவரை மூன்று தடவை அப்பாவிற்கு தெரியாமல் என்னிடம் பணம் வாங்கி விட்டார்கள். இதைவிட அம்மாவிடம் வாங்குவது வேறு..."

அடுத்து அப்பாவின் கடிதம். 'தங்கச்சிக்கு நல்ல இடத்திலை சம்பந்தம் பேசி வந்திருக்கு சீதனம் கொஞ்சம் கூடத்தான். ஆனால், நல்ல இடம், படிச்ச மாப்பிள்ளை, உனக்கு விருப்பமோ எண்டு எழுது. உன்ர முடிவில்லாமல் ஒண்டும் செய்ய மாட்டோம். கெதியா உன்ர முடிவை எழுது'

நாலு வருஷத்திற்கு முந்தி வீட்டுக்குதவாதவன், தண்டச்சோறு, ஊர்சுத்தி இப்படிப் பெயரெடுத்த அவனிடம் இன்று வீட்டில் நடைபெறும் முக்கியமான விடயங்களுக்கு அவனுடைய முடிவை கேட்கின்றார்கள்.

'நாலு வருஷத்தில் நான் பெரிய அறிவாளியாகி விட்டேனா? மோகனுக்கு தன்னை நினைக்க அவனுக்கு சிரிப்பு வந்தது.

பணம் ஒரு மனிதனை எவ்வளவு பெரிய மனிதனாக்குகின்றது.

இப்பொழுது சிறுபிள்ளை வேளாண்மையும் வீடு வந்து சேர்கின்றது.

# தமிழீழ...

(1 ம் பக்கத்தொடர்ச்சி)

இல்லை என இராணுவத்தினர் கையை விரிக்கிறார்கள்! அத்தோடு, இக்கைது பற்றி விசாரிக்கும் பெற்றோர்களுக்கு கொலைப் பயமுறுத்தலும் இராணுவத்தினரால் செய்யப்படுகிறது! இதனால் பெற்றோர்களுக்கு பலத்த அச்சமும், கவலையும் ஏற்பட்டுள்ளது.

கடந்த மாதங்களில் கைதடியில் வைத்து கைதுசெய்யப்பட்ட செல்லத்துரை சிவராஜாவின் நிலை மர்மமாகவுள்ளதை அடுத்து, இது குறித்து விசாரிக்கச்சென்ற குடும்பத்தினருக்கு, இப்படியான பெயரில் எவரையும் தாம் கைது செய்யவில்லையென இராணுவம் மறுத்திருக்கிறது.

சிவராஜாவின் நிலை குறித்து குடும்பத்தினர் கவலை கொண்டுள்ளனர்.

கடுகு முதல் தங்கம் வரை கொள்வனவு செய்ய நாடுங்கள்..



பிள்ளையார் ரேடேர்ஸ்

எம்மிடம் சகல விதமான ஆசிய நாட்டு உணவுப்பொருட்கள், மரக்கறி வகைகள், எவர்சில்வர் பொருட்கள், அலங்காரப் பொருட்கள், ஆண்கள், பெண்கள், சிறுவர், சிறுமியர்களுக்கு ஏற்ற ரெடிமேட் ஆடைகள், சாறி வகைகள், அசல் 22 கரட் தங்க நகைகள் போன்ற அனைத்தையும் ஒரே இடத்தில் மனநிறைவுடன் மலிவு விலையில் கொள்வனவு செய்ய நாடுங்கள்..

Mainzer landstr - 91, 60329 Frankfurt/M, Germany, Tel & Fax: 069/ 23 02 68

# தேன்கூடு

ஏ.ஜே. ஞானேந்திரன்

**தே**னீக்கள் இந்தத்தடவை நெடுந்தொலைவுக்கு பறந்து சென்று களைத்துப் போய் நம்மிடம் வந்து சேர்ந்திருக்கின்றன. அமெரிக்காவின் அட்லாண்டா நகர்வரை அல்லவா பறந்து போயிருக்கின்றன. பல சுவையான சங்கதிகளைத் தேன்கூட்டுக்குச் சேகரித்துக்கொண்டு வந்திருக்கின்றன. திடீரென வெடித்த குண்டால் அதிர்ந்து போய்விட்டாலும், கைநிறைய சுவஸ்ஸியமான விடயங்களை கொண்டு வந்து சேர்த்திருப்பது ஆறுதலான விடயம்தான்.

ஒலிவ் இலைகளிலான கிரீடந்தான் அன்றைய ஒலிம்பிக் வீரர்களின் 'தங்கப்பதக்க'மாக இருந்திருக்கிறது. (இன்றும் கூட தங்கப்பதக்கம் என்ற பெயரில் முதற்பரிசாகத் தங்கப்பதக்கங்கள் வழங்கப்பட்டாலும், இவை உண்மையில் தங்கமுலாம் பூசப்பட்ட வெள்ளிப்பதக்கங்களே!) வெள்ளியோ, தங்கமோ ஒலிம்பிக்கில் ஒரு பதக்கத்தை வென்றெடுப்பது ஒரு அரிய சாதனையாகவே கணிக்கப்படுகிறது.

பழைய காலத்து ஒலிம்பிக் விளையாட்டுக்கள் கி.மு. 776 இலேயே கிரீஸ் நாட்டின் ஒலிம்பியா நகரில் ஆரம்பித்து விட்டன. முதல் விளையாட்டில் வெறும் ஒட்டப்பபோட்டி மாத்திரமே நிகழ்ந்திருக்கிறது. காலப்போக்கில் புதுப்புது விளையாட்டுக்கள் சேர்க்கப்பட்டதோடு, கழுதைகளால் இழுக்கப்படும் தேரோட்டம் போன்ற விசித்திரமான போட்டிகளும் இடம்பெற்றிருக்கின்றன.

இன்று 100 ஆண்டுகளை தொட்டுவிட்ட நவீன ஒலிம்பிக் விளையாட்டுக்கள், 1896 இல் கிரீசின் ஏதென்ஸ் நகரிலேயே ஆரம்பித்தன. மரதன் ஒட்டப் போட்டியில் ஒரு கிரேக்க நாட்டுக்கிராமத்தவன் வெற்றி பெற்று கௌரவிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

பல பல வளர்ச்சிகளை, நாலு வருடங்களுக்கு ஒரு தடவை கண்டு வந்த ஒலிம்பிக் விளையாட்டுக்கள் 26 தடவையாக பிரமாண்டமான அளவில் அமெரிக்காவின் அட்லாண்டா நகரில் நடந்தேறி இருக்கின்றன.

அமெரிக்காவின் 'GOLDEN BOY' என்றழைக்கப்படும் மைக்கல் ஜோண்சன் ஒலிம்பிக் சரித்திரத்திலேயே என்றுமே இல்லாதவாறு 200 மீ, 400 மீ தூர ஒட்டப்போட்டிகள் இரண்டிலுமே தங்கப்பதக்கங்களை வென்று, அபார சாதனையைப் படைத்திருக்கிறார். 400 மீ ஒட்டத்தில் ஒலிம்பிக் சாதனை படைத்த இவர் 200 மீ ஒட்டப்பந்தயத்தில் உலக சாதனை படைத்து, உலகின் அதிவேக ஒட்டக்காரராகி இருக்கிறார்.

ஏற்கனவே 8 தங்கப்பதக்கங்களை, இதுவரை நடந்து முடிந்த ஒலிம்பிக் போட்டிகளில் வென்றெடுத்துவிட்ட, இன்னொரு அமெரிக்க புயல் ஒட்டக்காரரான கார்ல் லூயிஸ், நீண்ட தூரப் பாய்ச்சலில் (LONG JUMP) இந்தத் தடவை ஒரு தங்கப்பதக்கம் வென்றெடுத்திருக்கிறார். அமெரிக்காவின் றிலே (RELAY) ஒட்டப்போட்டிக் கோஷ்டியில் இவர் அனுமதிக்கப்பட்டிருந்தால், 10 வது பதக்கம் எடுத்து ஒரு உலகசாதனை படைத்திருக்கக்கூடும்.

பிறப்பால் கரபியன் தீவைச்சேர்ந்தவனாலும், பிரான்ஸில் வாழும் MARIE-JOSE என்ற பெண்மணியும், 200 மீ, 400 மீ ஒட்டப்போட்டிகளில் தங்கப்பதக்கங்களை வென்றுள்ளார். அமெரிக்காவிற்கு சென்று குடியேற முடிவெடுத்துள்ளார் இந்த வீராங்கனை!

உலகின் மிகப் பலசாலி என்ற பட்டத்தை ருஷ்யாவின் பொலிஸ் சார்ஜன் ஒருவர் தட்டிக்கொண்டு சென்றிருக்கிறார். 24 வயதான இவர் பெயர் ANDREI CHEMERKIN. 260 கிலோ எடையைத் தூக்கிய தன் மூலம் தங்கத்தைத் தன தாக்கி இருக்கிறார் இந்தப் பராக்கிரமசாலி!

அயர்லாந்தின் நீச்சல் வீராங்கனை நீச்சல் தடாகத்தில் 'தூள்' கிளப்பிருக்கிறார். ஒன்றா... இரண்டா... நான்கு பதக்கங்கள் இவருக்கு கிடைத்திருக்கின்றன. நீச்சலில் மூன்று தங்கப்பதக்கங்களும், ஒரு வெண்கலப் பதக்கமும் இவரிடம் போய்ச் சேர்ந்திருக்கின்றன.




புயல் ஓட்டக்காரன்!

தமது உடலை பலவிதங்களில் நெளித்து வளைத்து விளையாடும் "ஜிம்நாஸ்டிக்" (GYMNASTIC) என்றொரு விளையாட்டு உண்டல்லவா? தன்னுடைய கால் வேதனையை மறைத்து, தன் கோஷடி தங்கப் பதக்கத்தைச் சுவீகரிக்க வேண்டும் என்ற வேகத்தில் விளையாட்டுப் போட்டியில் தொடர்ந்து கலந்து கொண்ட 18 வயதான STRUG என்ற அமெரிக்க வீராங்கனையை யாருமே மறக்க முடியாது! இவருடைய பயிற்சியாளர் பெருமையோடு இவரைத் தூக்கிச் சென்று பதக்கம் வழங்கும் மேடைக்குக் கொண்டு சென்றிருக்கிறார்.

கறுப்பர்கள் நாங்கள் யாருக்குமே சளைத்தவர்கள் அல்ல. காற்பந்தாட்டப் உலகில் இனி எம்மிடம்




காலில் வலியென்றாலும், கண்ணோ தங்கத்தில்தான்!

தொடர்ச்சி 23 ம் பக்கம்...

# ஐடியா ஐயாசாமி



ரவிசெல்லத்துரை எழுதும் நகைச்சுவைத் தொடர்...

## என்ன இருந்தாலும் எங்கட நாடு போலவருமே!

வணக்கம் தமிழ் மக்களே, உங்களை மாசாமாசம் காணும் போதும், கதைக்கும் போதும் பெரிய பாரம் குறைஞ்ச மாதிரி இருக்குது பாருங்கோ. அதுவும் எங்கட தமிழ் பாசையில கதைக்கிறதெண்டால், எவ்வளவு சந்தோஷம் கண்டியளே. குரங்கு காட்டிலை இருந்தாலும் சரி, சர்க்கஸ் கூட்டிலை இருந்தாலும் சரி தன்ர கையாலை தன்னைத் தானே சொறியேக்க இருக்கிற சந்தோஷம் போலத் தான் அவன் அவன் தன்ர பாசையை கதைக்கேக்க சந்தோஷப்படுவான்கள்.

ஆனால், எங்கட இந்த சில தமிழ் சனத்திற்கு மற்றவன்ர பாவையை கதைக்கிறதில தான் சந்தோஷமாம். தன்ர தமிழ்ப்பிள்ளைகள் தமிழை விட இங்கிலீசு வடிவாய் கதைக்கிறான்கள் எண்டு புழுகயாய் கதைப்பினம். இங்கிலீசு, ஜேர்மன், பிரஞ்சு பாசையை பிள்ளை படிக்கட்டும். அந்தந்த இடத்திற்கு தேவையான பாசையை கதைக்கட்டும். அதை எவனும் குறை எண்டு சொல்லவும் முடியாது. சொல்லவும் கூடாது. ஆனால், வீட்டில தாய் தகப்பனுடன் தமிழிலை கதைக்க வேணும், தமிழ் மொழியை படிக்க வேணும். எனக்கென்று ஒரு மொழி, ஒரு நாடு இருக்க வேணும் கண்டியளே. இதை எல்லாம் ஏன் இப்ப சொல்லுறன் எண்டால், நான் லண்டனுக்கு போட்டல்லே வந்தனான். லண்டனிலை ஐரோப்பா ஐயாத்துரை, ஜேர்மன் சேனாதி, பரிஸ் பரமு, லண்டன் கந்தையர், சுவிஸ் சுந்தரம் எல்லாரையும் கண்டனான். எல்லாரும் விடுமுறைக்கு லண்டனை பார்க்க வந்தவையாம். எல்லாரும் லண்டனிலை என்னத்த பார்த்தனீங்கள் எண்டு கேட்டன் -எல்லாரும் சொன்ன பதில் ஓரேமாதிரித்தான் இருந்தது. அவர அவர் தன்ர தன்ர சொந்த பந்தங்களிண்ட வீட்டில இருந்திட்டு, முருகன் கோவில், பிள்ளையார் கோவில்களைப்பார்த்துவிட்டு, தங்கட, தங்கட நாட்டிற்கு போகினம். பேகேக்க லண்டன் எப்படி என்று கேட்டன். எல்லாற்றை பதிலும் ஒரேமாதிரித்தான் இருந்தது பாருங்கோ. அப்படி என்ன பதில் எண்டு கேட்கிறியளே. ஜேர்மன் சேனாதி சொன்னார் என்னதான் லண்டன் எண்டாலும் எங்கட நாடுமாதிரி வருமே எண்டார். சுவிஸ் சுந்தரம், பரிஸ் பரமு எல்லாற்றை பதிலும் இது தான். அவனவன் தன்ர நாடு, தன்ர நாடு எண்டு சொன்னது எங்கட தமிழ்ஈழத்தை தான் எண்டு நினைச்சு போடாதீங்கோ.

தான் தான் இப்ப அகதியாய் வாழுற நாட்டைத்தான் சொன்னவங்கள். இதைக் கேட்ட உடனே எனக்கு எங்க போய் முட்டுறது எண்டு புரியேல்ல பாருங்கோ.

வெள்ளைக்காரன்கள் விடுமுறைக்கு ஸ்ரீலங்காவுக்கு போட்டுவந்து என்ன அழகான நாடு, நல்ல சனம் எண்டு புழுகிறான்கள். இங்க இருக்கிற தமிழ்ச்சனம் என்னெண்டால் பிரச்சனை தீர்ந்தாலும், ஈழத்திற்குப் போய் யாரும் சீவிப்பானோ எண்டு கேட்பினம் போல கிடக்கு.

பனைக்கு பின்னாலை, பனையை பிடிச்சபடி குந்தி இருந்த சனம், இப்ப பனை என்ன நிறம் எண்டு கேட்டாலும் கேட்பினம் போல கிடக்கு. இப்படிப்பட்ட சில தமிழ்ச்சனத்திற்கு அட்வைஸ் சும் பண்ண முடியாது, ஐடியாவும் குடுக்க முடியாது பாருங்கோ.

எனக்கும் நேரம் போகுது. அடுத்தமுறை வாறன் பிள்ளையள். அதோட ஒரு கேள்வி கண்டியளே, ஐயா சாமி வந்து அறுக்கிறான் எண்டால் சொல்லிப்போடுங்கோ. ஐயாசாமியின்ர ஐடியா சுப்பர் எண்டால் சொல்லுங்கோ அடுத்த முறை சந்திக்கிறன். எல்லாருக்கும் மங்களமுண்டாகட்டும்.

## தோழமை



கிழிசல் துணியைத் தைக்கும் வேலையில் விரல்கள்.

சுட்டு விரல் அடுத்த விரலைப் பார்த்து, "துன்பப் படுகிறவர்களுக்குத் துன்பப் படுகிறவர்களே துணை" என்றது.

அடுத்த விரல் கேட்டது:-

"ஏன் அப்படிச் சொல்லுகிறாய்?"

"இதோ பார ன்..." சுட்டு விரல் சொன்னது:-

"கிழிசல் துணிக்கு
ஓட்டை ஊசி"

காசி ஆனந்தன்.

## -வாசகர் உலகம்-

ஐயா, இளைஞன் ஆசிரியரே, எப்படி ஐயா உமக்கு ஒரு பிராங்குக்கு இளைஞன் பத்திரிகையை விற்க முடிகின்றது. அதுவும் ஐரோப்பாவில் அச்சிட்டு விற்க எப்படி கட்டுப்படி ஆகின்றது.
'கேள்வி - பதில்' பலே, பலே. 'பாக்யா' தோற்றான் போங்கள். 'பத்திரிகை உருவில் ஒரு சஞ்சிகை' இளைஞன் என்பேன். விடயங்கள் 1000 மடங்கு, விலையோ ஒரு மடங்கு.
எழுத்துப்பிழைகள் தவிர்க்க முயற்சிக்கவும். அரசியல், அரசியல் என்று எழுதும் எம்மவர்கள் மத்தியில் சிரிக்கவும், சித்திக்கவும் வைக்க ஒரு 'இளைஞன்' இருக்கின்றான் என்ற நிம்மதி. விவாத மேடையை உருவாக்கி வாசகர்களின் எழுத்தாற்றலுக்கு ஊக்கம் ஊட்டும் இளைஞனுக்கு எனது பாராட்டுக்கள்-வாழ்த்துக்கள். இளைஞனுக்கு எழுதும் அனைத்து எழுத்தாளர்களுக்கும் எனது நன்றிகளும், வாழ்த்துக்களும் உரித்தாகுக.

-சிவா, பெலின்சோனா - சுவிஸ்-

பல்சுவை விருந்து படைக்கும் இளைஞனுக்கு வணக்கம்!
ஆவணி மாத இதழில் இரா.-மோகனராஜாவின் அர்த்தமற்ற இந்துமதம் என்ற கட்டுரை இனி மேல் தொடராது என்றும் அவரே அதற்குரிய காரணத்தையும் குறிப்பிட்டிருந்தார். ஒர் சீர்திருத்தம் பாதியில் இடைநிறுத்தப்படுவது வேதனைக்குரியது. இந்த விஞ்ஞான யுகத்தில் வாழும் நம் தமிழர்களிடையே உறைந்து கிடக்கும் மூடநம்பிக்கைகள், பிற்போக்குப் பழக்கவழக்கங்கள் போன்ற பலவற்றை மாற்ற வேண்டுமென்ற உள் நோக்கம்தான் அவரின் கட்டுரையில் வெளிப்படுகிறது. தமிழர்கள் மொழிப்பற்று இல்லாதவர்கள், ஒற்றுமை இல்லாதவர்கள், ஆனால் மதப்பற்று உள்ளவர்கள். அதனால்தான் கட்டுரையாளர் அவர்கள் தனது கட்டுரைக்கு மதத்தைச்சார்ந்த தலைப்பைச் சேர்த்திருக்கிறார் போலும்.
மேலும், ஆடி மாத இதழில் 'குற்றவாளிக் கூண்டில் பாரதி' என்ற தலைப்பில் திரு. வண்ணை ஆனந்தன் அவர்கள் எழுதிய கட்டுரைக்கு ஆவணி மாத இதழில் விவாதமேடையில் ராஜா சிவகுமார் அவர்கள் ஏற்றுக்கொள்ளக் கூடிய கருத்துக்களைத் தந்திருக்கிறார். பாரதி குற்றவாளியா?

பாரதியார் மனித வடிவில் தெய்வம். சிங்கள தீவினிற்கோர் பாலம் அமைப்போம் என்று அவர் பாடியது உண்மைதான். சிறந்த தத்துவங்களை பாடல்கள் மூலம் எமக்கு அள்ளித்தந்த பாரதி அப்பாடலை என்ன நோக்கத்தோடு பாடினார் என்பதை நன்கு சிந்தித்து பார்த்தால் விளங்கிக்கொள்ளலாம். பாரதியை குற்றவாளியாக் காதீர்கள். இப்போ மிஞ்சியுள்ள அஞ்சாமை, நேர்மை, கட்டுப்பாடு எல்லாம் இருந்த இடம் தெரியாது மறைந்து விடும்.

-ஜெயாசதீஸ், டியூரன்-

இதயமான இளைனே!
'சித்திக்க வைக்கும் சித்திரம்' என்ற கவிதையை வாசிக்க இதயமே தவித்தது போலிருந்தது. இப்படியான கவிதைகள் தொடர்ந்து இளைஞனில் இடம் பெற்று வந்தால் எம்மக்கள் படும் அவலத்தை எம்மை போன்ற பலரும் அறியக்கூடியதாக இருக்கும்.

-மதி சண்முகராஜா-


Largest Circulation in Europe
**இளைஞன்**
**வளர்ச்சியில் இன்னுமொரு மைல் கல்!**
**இந்த இதழில் இருந்து உங்கள் "இளைஞன்" கொலண்டிலும் வெளிவருகிறான்!**
**கொலண்டில் "இளைஞன்" பற்றிய சகல தொடர்புகளுக்கும்:-**
J. S. ஞானமுத்து
PASTORIJSTRAAT 48
6361 AJ NUTH
HOLLAND
Tel: 045/ 5242903


# 'இளைஞன்' விவாத மேடை!

## குற்றவாளிக் கூண்டில் பாரதி!

கடந்த 'இளைஞன்' இதழில் பாரதி தொடர்பான கட்டுரையின் விவ த டேடையில் கலந்து கொண்ட அன்பர் ஒருவர், எதுவித சம்பந்தமுமில்லாத விடையங்களை எழுதி தன் அழற்சியையும், தற்குறித்தனத்தையும் காட்டியுள்ளார். பாரதி பற்றிய எந்த விவ தத்தையும் அவரிடம் காணமுடியவில்லை! 'சிறைபற்றி எழுதாதீர்கள் குறைத்துக்கொள்ளுங்கள்' என்றும், 'உங்களைப் போல் என்னைப்போல் போலித் தமிழர்' என்றெல்லாம் ஏதேதோ எழுதிக்குவித்துள்ளார். இதை அறிவுடையோர் எண்ணி நகையாடுவார்கள். இது வாதமா? ஆக மொத்தத்தில் நா. கதிரைவேற்பிள்ளையின் அகராதிபற்றிக் குறிப்பிட்டது ஒன்று மட்டுமே விவாதத்துக்குரியது. இதில்க்கூட கோட்டைவிட்டு திரு. வண்ணையானந்தன் வாதத்திற்கு வலுயூட்டியுள்ளார்.
நான் விவாதமேடையில் மட்டுமே பங்குபற்ற விரும்பினாலும் இந்த அன்பருக்கு சில விடயங்களைத் தெளிவு படுத்த விரும்புகின்றேன்.
ஈழமண்ணில் அறவழி அரசியல் நடந்த காலத்திலேயே விடுதலைக்கான புரட்சி விதைகளைத் தூவியதுடன், அன்றே வெடிச்சத்தங்கள் கேட்கத்தொடங்கியதிற்கும் மூலமாக நின்றவர்களில் வண்ணை ஆனந்தன், காசி ஆனந்தன் போன்றோர் முக்கியமாய் குறிப்பிட வேண்டியவர்கள். இதன் காரணத்தால் ஈழமண்ணில் வைத்து முதன்முதலில் கைதானவர்களும் இவர்களே. சிறைச்சித்திரவதைகளை மட்டுமன்றி திரு. வண்ணை ஆனந்தன் பெற்றதாயின் இறுதிச்சடங்கிலும் கலந்து கொள்ள அனுமதி மறுக்கப்பட்ட நிலையில்கூட கலங்காமல், 7 ஆண்டுகள் சிறைச்சித்திரவதைகளைத் தாங்கியவர். விடுதலையான பின்புகூட வண்ணை ஆனந்தனின் நடவடிக்கைகளால் அச்சமுற்ற சிங்களவரசு, அவரையும் யாழ். யோகேஸ்வரனையும் சுட்டுக்கொல்லும்படி அனையிறவு இராணுவ முகாமிற்கு இரகசியத்தகவல் அனுப்ப அதை தற்செயலாக ஒட்டுக்கேட்ட தொலைபேசி இலக்காத் தமிழ்ப் பெண் ஒருவர் அன்றைய தமிழ்த் தலைவர்களுக்குத் தெரியப்படுத்த பின் சர்வதேச மன்னிப்புச்சபை (AMNESTY INTERNATIONAL) பேருதவியால் நாட்டைவிட்டு வெளியேறியவர் திரு. வண்ணை ஆனந்தன். திருமணமாகி ஒருமாதம் கூட செல்லாத நிலையில் அவர் வெளியேற, அதை அறிந்த சிங்களவரசு அவர் மனைவியை 4 ம் மாடிக்கு இழுத்துச்சென்று துன்புறுத்தியது. மீண்டும் சர்வதேச மன்னிப்புச்சபையால் அவரது துணையாரும் காப்பாற்றப்பட்டார். (விபரங்கள் டாக்டர். ஜனார்த்தனம் எழுதிய 'இணைந்த ஜெர்மனியில் இன்பத் தமிழர்' என்ற நூல்) எனவே எதுவிதக் காரணமுமின்றி இங்கு வந்து 'வாழும்' -நண்பர் அவர் தன்னைப் பற்றிக் கூறியது போல் போலிதான். மற்றவர்களைப் பற்றி எழுத அவருக்கு என்ன யோக்கியதை?
இலங்கை இராணுவம், இந்திய இராணுவம், தேசிய இராணுவம், மற்றும் தமிழ்க்குழுக்கள் -என்றெல்லாம் ஏதோ பிதற்றுகிறார். (சிங்கள இராணுவத்தை 'இலங்கை' என்ற அடைமொழியால் தான் அன்பர் குறிக்கிறார்) பாவம் அரசியல் அரிச்சுவடி கூட அவருக்குத் தெரியவில்லையே!
வண் ணை - காசி காலத்தில் ஈழ இறைமைக்காக அவர்கள் சிங்களவரசுடனும் அதன் ஏவல்படைகளுடனும் முட்டி மோத வேண்டிய நிலை. அதன் பரிணாம வளர்ச்சியே இன்றைய கெரில்லா முறை யுத்தம். இதுகூடப் புரிந்து கொள்ளாமல் ஏதோ மன அழற்சியால் பிதற்றியுள்ளார். மேலும் ஒரு குறிக்கோளுக்காக சிறை புகுந்தவன் தன் அனுபவங்களை, கடந்து வந்த பாதையை எடுத்துக் கூறினால் என்ன தவறு? ஆனால், கட்டுரையில் இதுபற்றி வண்ணை ஆனந்தன் எதுவும் குறிப்பிடக்கூட வில்லையே! ஏன் இந்த முட்டாள் தனமான வாதம்?
இனி விடயத்துக்கு வருகிறேன். நா. கதிரைவேற்பிள்ளையின் அகராதி பற்றியது. இது பற்றி அந்த அன்பர் தந்துள்ளது பின் வருமாறு:
தமிழ்மொழி அகராதி
(நா. கதிரைவேற்பிள்ளை)
ஈழம்: இலங்கை, சிங்களதேசம், உலோகக்கட்டிகள், கன்னி, பொன்.

இதில் இருந்து என்ன தெரிகிறது - அகராதியென்பது ஒரு மொழியில் உள்ள மிகப்பழமையான சொல்லைப்போட்டு, அதே மொழியில் அச்சொல்லுக்கு உள்ள வேறு கருத்துக்களை கொடுப்பது. இந்த அகராதியிலும் மிகப்பழமையான சொல்லான 'ஈழம்' தரப்பட்டு அதற்கு உள்ள வேறு கருத்துக்களுக்கான பெயர்கள் தரப்பட்டுள்ளது. இவ்வகராதியின் படியும் ஈழத்துக்குத் தரப்பட்ட முதலாவது கருத்து இலங்கையென்பதே. இதுகூட திரு. வண்ணை ஆனந்தன் வாதத்திற்குத்தான் வலுவூட்டுகிறது. இதற்காக இந்த அன்பரைப் பாராட்டுகின்றேன்.
சூரிய நாராயண சாஸ்திரி என்ற தமிழ் அறிஞர் வடமொழியில் தனது பெயர் இருப்பது தவறு என, தன் பெயரை 'பரிதிமாற்கலைஞன்' என மாற்றி அமைத்து தமிழுக்குத் தொண்டு செய்தார். இதுபோல வேதாசனம் என்ற தன் இயற்பெயரை வடமொழியென்றபடியால் மறைமலை என மாற்றியமைத்து தனித்தமிழ் இயக்கம் கண்டதால் தமிழ்கூறு நல்லுலகம் இன்றும் இவ்வறிஞரை மறைமலையடிகள் எனப்புகழ்ந்து பாடுகிறது.
ஏறக்குறைய இக்காலத்தைச் சேர்ந்த பாரதி கவிஞனாக மட்டுமன்றி கட்டுரையாசிரியனாகவும் திகழ்ந்தான். இவனது கட்டுரைகளில் தனித்து இயங்கும் ஆற்றல் உடைய தமிழில் வலிந்து ஒரு சதவீதத்துக்கும் மேலாக வடமொழிச் சொற்களைக் கலந்து எழுதித் தன் தமிழைக் கொச்சைப்படுத்தியுள்ளான். அன்பருக்கு இது தெரியுமோ? படிக்கவும் பாரதிக்கட்டுரைத் தொகுதி, இலக்கியம் கற்றவர்கட்கு இது புரியும்.
திரு. வண்ணை ஆனந்தன் மிகவும் பெருந்தன்மையுடன் பாரதிக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனைதான் கோருகிறார். நான் பாரதிக்கு ஈழத்தை சிங்களம் என்றதற்காகவும், தமிழில் வலிந்து வடமொழிச்சொற்களைக் கலந்ததற்காகவும் கடுங்காவல் தண்டனை விதிக்க வேண்டும் என்றும் கோருகின்றேன். யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாகவெங்கும் காணோம் என்று பாடிவிட்டு வடமொழிச் சொற்களை வலிந்து கலந்தது ஏன்?
இறுதியில் அந்த அன்பருக்கு ஒரு வேண்டுகோள்! விவாத மேடையில் விவாதியுங்கள். சம்பந்தமில்லாததை எழுதி உங்களை அளக்க நீங்களே அளவுகோலை எடுத்துக் கொடுக்காதீர்கள். படித்தவர்களும் 'இளைஞன்' படிக்கிறார்கள்.

**-ப. வாகிசன், ஜெர்மனி-**

## பொள்ளாச்சியில் 'இளைஞன்'

*பொள்ளாச்சியில் இருந்து 'சிற்றிதழ்-செய்தி' எனும் பெயரில் ஓர் ஆய்வு நிலையம் உலகில் வெளிவந்துகொண்டிருக்கும் சிற்றிதழ்கள், பத்திரிகைகள் போன்றவற்றை ஆராய்ந்து அதுபற்றிய விபரங்களை பதிவாக்கிக்கொண்டிருக்கிறார்கள்.*

*இவ்வாய்வு நிலையத்தில் கிட்டத்தட்ட சுமார் -2500 க்கும் மேற்பட்ட சிற்றிதழ்கள் சேகரித்து வைக்கப்பட்டுள்ளன.*

*இவ்வாய்வாளர்களால் உங்கள் 'இளைஞ'னுக்கும் ஓர் ஆரோக்கியமான ஆய்வு நடத்தப்பட்டது.*

*முகவரி:*

*பொள்ளாச்சி நசன், 1 சம்பத்நகர், துளேஸ்வரன்பட்டி, பொள்ளாச்சி-6*

ஒரு வெகுஜன இதழை எப்படிச் சிறந்த சிற்றிதழாக நடத்தலாம் என்பதற்கு உதாரணமாக இவ்விதழ் அமைந்துள்ளது. ஜெர்மனி, சுவிஸ், பிரான்ஸ், கனடா, டென்மார்க் என ஐந்து நாடுகளில் ஒரே நேரத்தில் வெளியாகுகிற தமிழ்மாதப் பத்திரிகையிது. ஓவியர் சேகர் அவர்களை ஆசிரியராகக் கொண்டு. சிந்துநதி பதிப்பகத்திலிருந்து அச்சாகி இவ்விதழ் வெளியாகுகிறது.

இளைஞனால் உலகில் ஒன்றிணைவோமென,சகோதரஅன்புடன் அழைப்பு விடுக்கிறது இவ்விதழ். மே 94 இல் தொடங்கப்பட்ட இவ்விதழ் தொடர்ந்து வெளியாகி, தற்பொழுது(ஜூன்96) மூன்றாம் ஆண்டின் முதல் இதழை வெளியிட்டுள்ளது.

ஒன்றிலிருந்து பத்தொன்பதாவது இதழ்வரை புத்தக வடிவில் வெளியிட்ட இவ்விதழ். இருபதாவது இதழிலிருந்து பத்திரிகை வடிவில் வெளியிடுகிறது. வடிவம், பிரதிகளின் எண்ணிக்கை, இதழ் பரவல், விற்பனை யுக்தி — போன்றவைகளைப் பார்க்கும் பொழுது, பேரிதழாகவும், இதழின் உள்ளடக்கம், இலக்கு நோக்கிய நகர்வு, செறிவான அணுகுமுறைஆகியவற்றில் சிற்றிதழாகவும் இருக்கிறது.

சுதந்திரத்திற்கு முன்பு தமிழகத்தில் சிற்றிதழ்கள் / பேரிதழ்கள் என்ற பாகுபாடு இல்லை; வெளியான இதழ்கள் பெரும்பாலும் சுதந்திரப் போராட்ட நிகழ்வுகளையும்/செய்திகளையும்/ காந்தியடிகளையும், கவிதை, கதை, கட்டுரை வடிவில் வெளிப்படுத்தி, மக்களை ஒருமுகப்படுத்தி — இலக்கு நோக்கி இயங்க வைக்கிற இணைப்புப் பாலமாக இருந்தன. இலட்சியத்துடன் கூடிய சிந்தனைகளை வளர்த்துவதற்கான இயங்குதளமாக இருந்தன; சாதித்தும் காட்டின சுதந்திரம் கிடைத்ததும், பத்திரிகைகள் செய்தித் தொடர்பு சாதனங்கள் என்கிற உயர்ந்த நிலையிலிருந்து விலகி, வியாபார/விற்பனைப் பொருளாக மாற்றப்பட்டு — கருத்து விதைப்பிற்குப் பதிலாகப் — பொழுதுபோக்குச் செய்திகளைப் பாலியல் கலந்து விற்பனை செய்ய ஆரம்பித்தன. உணர்வாளர்கள் கூட்டம் எப்பொழுதும்/ எங்கும் சிறு கூட்டம் தான்; பெரும்பாலோர் சாய்வாளர்களே. வியாபாரஇதழ்கள் தங்கள் வியாபாரத்தைப் பெருக்கிக் காயடிக்கச் செய்தன.

பத்திரிகைகளின் இவ்வகையான வியாபாரத் தன்மையால், மக்கள் திசைமாறுவது கண்டு, வெகுண்டு, அதற்கெதிராக — தன் சிந்தனையை ஒட்டிய குழுக்களோடு இணைய — பகிர்ந்து கொள்ள/ இயங்க, ஆரம்பித்ததன் விளைவே சிற்றிதழ்கள்; தரமான இலக்கிய இயக்க, கலை கலாச்சார ஏடுகள்.

இந்த வகையில், தற்பொழுது புலம் பெயர்ந்து பூமிப் பந்தின் பெரும்பாலான எல்லாப் பகுதிகளிலும் வாழ்ந்து கொண்டு. நெருக்குதல் களுக்கும், கலாச்சார சிதைவுகளுக்தம் உட்பட்டு, தாயகத்தை இழந்து — ஒரு விடிவு நோக்கிய நிலையில உள்ள அவர்களது ஒருங்கிணைப்பிற்காக — இயங்கி வருகிற பல சஞ்சிகைகளில் இளைஞன் இதழும் ஒன்று. வெகுஜனசாயலில் பலரையும் சென்றடையும் இந்த இதழின பல்வேறு தனமைகளையும் இங்கே பார்ப்போம்.

இதழின் தலையங்கம் சமகால தாயக நிகழ்வுகளுக்கான எதிர் வினையாக அமைந்து மக்களை வழிநடத்துவதைக் காணமுடிகிறது.

ரமேஷ் வவுனியன் தொடராக எழுதுகிற 'தேடல்' கவிதைகள் (இதுவரை தேடல் 14 வெளியாகியுள்ளது) புலம் பெயர்ந்தவர்களது பிரச்னைகளையும், தாயகப் பிரச்சனைகளையும், உணர்வுபூர்வமாகப் படம் பிடித்துக் காட்டுவதாக அமைந்துள்ளது.

இளைஞர்களுக்கான ஊக்குவிப்பு வரிகளைத் துணுக்குகளாக வெளியிட்டு ஊக்குவிக்கிறது. ஒவ்வொரு இதழிலும் காசி ஆனந்தனின் கவிதை வரிகளை வெளியிட்டுள்ளது. செய்தித் துளிகள் என வினோத விந்தைச் செய்திகளைக் குறிப்பிட்டுள்ளது.

த.ராஜினியின் இலக்கிய நயம், உங்களுக்குத் தெரியுமா? சுவையான பகுதிகளே. சிரித்திரனில் வெளியான Mrs. /Mr., டாமோ போல இவ்விதழில் வெளியாகுகிற கந்தப்புவும், சோமண்ணையும், சிலோன் சின்னத்துரை, ஐரோப்பா ஐயாத்துரையும் நாட்டு நடப்பை அரசியல் விவகாரங்களை/ மூட நம்பிக்கைகளை/ புலம் பெயர்ந்த மக்களின் போலியான நடத்தைகளைக் கிண்டலடிக்கிற பாங்கில் வெளிப்படுத்துகிறது. வாசகர்களின் படைப்பாக்கமாக இப் பகுதி இருப்பது இதன் சிறப்பு.

இவ்விதழ் கவிதைப் போட்டியை நடத்தி, 100 க்கு மேற்பட்ட கவிதைகளை உலகத் தமிழர்களிடமிருந்து பெற்று. தேர்வு செய்து பரிசளித்துள்ளது. தரமான கவிதைகளைத் தொடர்ச்சியாக இதழில் வெளியிட்டுள்ளது. இதழில் வெளியாகுகிற 'கவிதைகள் உலகம்' பகுதியில் பல்வேறு நாடுகளில் வாழுகிற தமிழர்களின் கவிதை வரிகளைக் காணுகிற போது நிறைவடைய முடிகிறது.

உலகில் தமிழர்கள் எனப் படங்களுடன் இந்த இதழ் உலகத் தமிழர்களின் செயற்பாடு, அமைப்பு, இயக்கம் பற்றிய செய்திகளை வெளியிட்டு, அவர்களை இணைக்க முயலுவது வாழ்த்துதற்குரியதே

கட்டுரைகள்ஒன்றிரண்டு பக்கங்களுக்குள் செய்தியைவிரிவாகத் தருகின்றன. பிள்ளையார் குடித்த பால், இளைஞர்களுக்கான ஊக்குவிப்பு, எதிரியில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம், யுத்த வெறியும் இனவெறியும் எனத்தொடருகிற இவ்விதழின் கட்டுரைகள் வாசகர்களை யோசிக்க வைக்கத் தூண்டுவதே.

இதயச் சாக்கடைகள், நடைமுறை, அழியாத சுவடுகள், தீர்வு, என — ஒவ்வொரு இதழிலும் ஒரு சிறுகதை வெளியாகியுள்ளது. இச் சிறுகதைகள் பொதுவாக பெண்கள் முன்னேற்றம், புலம் பெயர்ந்து வாழுகிற சிக்கல், தாயகம் காத்தல் — என்கிற அடிப்படையிலேயே அமைந்துள்ளன.

இவ்விதழில் தொடருகிற தொடர் நவீனம் 'சங்கரி' குஞ்சம்மா எழுதியுள்ள படைப்பு. புடவைக் கடையில் வேலைபார்த்துக் கொண்டிருந்த சங்கரி, ராஜனைக் காதலிக்க, வரதட்சணை கேட்டதால், அவனை விட்டுவிலகி, பிறகு கண்ணனைக் காதலித்துக் கணவனாக அடைய, கண்ணனிடம் தன் ஆரம்பக் காதலை வெளிப்படையாகக் கூற, கண்ணன் சந்தேகப்பிராணியாகி, அவளது வாழ்க்கை மௌன யுத்தக் களமாக, இடையில் சந்தித்த சுதா அன்பில் கொஞ்சம் மலர இப்படி காதலன்—கணவன்—நண்பன் என 3 ஆண்களுக்கிடையில் பின்னப்பட்ட வலைப்பின்னலில் சிக்கிய சங்கரியை இதுகாட்டுகிறது தவறுகள் தொடர் நவீனம் எஸ், எஸ். குகநாதன் எழுதியிருப்பது.

கேள்வி - பதில் என எல்லா வாசகர்களையும் எழுத வைத்து — சிறப்பான கேள்வியைத் தேர்ந்தெடுத்து அரை ஆண்டுக்கான இதழ் இலவசமாக அனுப்புகிற பரவல் யுக்தியை இதழ் கடைபிடிக்கிறது. கேள்வி பதிலுக்கு குட்டிக் கதைகளைக் கூறுவது ஈர்ப்புடையதே. வாசகர் உலகம் என வாசகர் கடிதங்களை வெளியிட்டு வருகிறது.

சிரிங்க - சரிங்க என இதழின் இடையிடையே சோர்வுதட்டாமல் இருக்கச் சிரிப்புப் பகுதியையும் இதழில் இணைத்துள்ளது.

சிறுவர்களே எதிர்கால வாரிசுகள் என்பதை உணர்ந்த இவவிதழ் சிறுவர்களுக்குத் தனியாக சிறுவர் உலகம் பகுதியை ஒதுக்கி அவர்களது சிந்தனையை வளர்த்துகிறது. சிறுவர்களுக்கான குறிப்புகளும், வண்ணம் தீட்டுதலும் பயனாகுவதே.

செய்தித் துளிகள் என உலக அளவிலான அம்மாதத்தின் குறிப்பிடத் தகுந்த, செய்திகளைச் சுருக்கமாகத் தருகிறது.

அறிவியல் உலகம் என அறிவியல் துணுக்குகளைப் படங்களுடன் வெளியிட்டு வருகிறது.

தேன்கூடு என அதிசயச் செய்திகளைப் படத்துடன் விவரிக்கிறது.

பெண்ணுலகம் என பெண்களுக்கான குறிப்புகளையும், பெண்கள் பிரச்சனைகளையும் குறிப்பிடுகிறது. இந்தியாவில் பெண்கள் சரியாக நடத்தப் படவில்லை என்கிற கிளிண்டன் மனைவியின் கருத்துரைக் குறிப்பு யோசிக்க வேண்டியதே.

மிஸ்டர் அவதானியின் நம்பினால் நம்புங்கள் பகுதி — எம்மை நாமே மாற்றிக் கொள்ள/ கொஞ்சிம் சிந்திக்கவைக்கிற பகுதியிது.

வண்ணை ஆனந்தனின் கட்டுரைகள் — புகலிட வாழ்வின் — தமிழர்களது நிலையை, அவலங்களை, போலியான வாழ்க்கையை இலக்கிய நயத்தோடு சுட்டிக் காட்டுகின்றன.

இவ்விதழின் சிறப்பு அம்சம், இவ்விதழில் வெளியாகுகிற — தமிழக/இலங்கைச் செய்திகளே. பத்திரிகை போலக் குறிப்பிட்ட இலக்கு நோக்கிய செய்திகள் விளக்கமாக இடம் பெற்றுள்ளதைக் காணமுடிகிறது. அடிமையாக வாழும் அவலம், புலிகள் இயக்கம் ஒரு மாபெரும் சக்தி, யாழ் கைபற்றிய படையினருக்குக் காணி, படையினரைக் கண்டால் மக்கள் ஓடுகின்றனர் — எனத் தொடரும் இவ்விதழின் செய்திகள் தேர்ந்தெடுத்த செய்திகளின் குறிப்புகளே.

*தொடர்ச்சி23ம் பக்கம்...*

**இளைஞன் இந்த மாத சிறுகதை**

# இவன், இவர், நீங்கள்.



**— கற்கி — ஜெர்மனி —**

சங்கரன் இலக்கியத்தில் ஆர்வம் உள்ளவன். கதை கட்டுரை கவிதை கூட எழுதுவான். ஆனால், இலக்கியத்தில் இம்மியளவு சம்மந்தமில்லாத வியாபர ஸ்தாபனமான 'நிக்கர் மானில்' பொதிமேற்பார்வையாளராக வேலை செய்கிறான். கிட்டத்தட்ட, இரண்டாயிரம் மார்க் சம்பளம் எடுக்கிறான். சில பத்திரிகைகளில் கதை கட்டுரை கவிதைகள் எழுதுவதால் அவனது நண்பர்களுக்கும் அவன் குடியிருக்கும் 'பாசலபிளட்ஸ்' அப்பாட்மென்றில் குடியிருக்கும் மற்றைய தமிழ் சகாக்களுக்கும் அவன் மீது ஒருவித மதிப்பும் அன்பும் இருந்தது. ஆனால், அவன் மதிப்பை கருடித எழுதுவதும் இல்லை எதிர்பார்ப்பதும் இல்லை. சங்கரன் படித்தவன் அதிகம் படித்துக்கொண்டிருப்பவன் என்றெல்லாம் தெரிந்தும் அவனது சில தான்தோன்றித்தனமான நடவடிக்கைகளைக் கண்டு சில நண்பர்கள் அவன் மீது வெறுப்பும் கொண்டிருந்தனர். சங்கரனுக்கு வயது முப்பத்தி ஏழு. அவன் கலியாணம் கட்டாத பிரமச்சாரி என எண்ணுபவர்களும் உண்டு. அவனது பெற்றோர்களும் இவ்வளவு காலமும் அவனுக்கு திருமணம் செய்து வைக்க வேண்டும் என்ற அக்கறை இல்லாதவர்களாக இருந்து விட்டார்கள். சங்கரன் ஜெர்மனிக்கு வந்து பதினாறு வருடங்களுக்கு மேல் ஆகிறது. குடும்பத்தின் நல்வாழ்வுக்காக, இல்லை, வசதிக்காக உழைத்து உழைத்து என்னும் வாழ்ந்து கொண்டிருக்கிறான். இயற்கையாகவே அவன் பெண் விசயத்தில் சபல புத்தியுள்ளவன் என்பது நண்பர்கள் கணிப்பு, கண்ட பெண்களுடன் திரிகிறான் என்ற குற்றச்சாட்டு வேறு.

சென்ற மாதமும் அப்படித்தான் 'டிஸ்கோ'வுக்கு போனவன் எவளோ ஒருத்தியை அதாவது வெள்ளைக்காரியை அழைத்துக் கொண்டு தன் அறைக்கே வந்து விட்டான்.

அன்று விடியற்காலையில் அவசரமாக 'சோசல் ஆம்ட்' போய்க் கொண்டிருந்த சபாநாதன் சங்கரனின் அறையில் இருந்து ஒரு வெள்ளைக்கார பெண் வெளியேறுவதை பார்த்துவிட்டார். உடனே தன் அலுவல்களைவிட்டுவிட்டு, விழித்திருந்த சில அயல்அறைக் காரர்களிடம் ஆளைக் காட்டி விசயத்தை விளக்கிவிட்டார். விசயம் 'ரியர்காஸ்' மாதிரி, அந்த 'அப்பாமென்ற்' முழுதும் பரவிவிட்டது.

அன்று மாலை சங்கரன் வேலை முடிந்து வீடு வரும்போதே அவனைத் தொடர்ந்து வந்த 'அப்பாமென்ற்' குடியிருப்பாளர்கள் சிலர், நண்பர்கள் அவனது அறைக்கு வந்தனர். இவர்கள் அவனது அறைக்கு சில அலுவல்கள் நிமிர்த்தம் அடிக்கடி வந்து போபவர்கள்தான், இருந்தும் ஒரே சமயத்தில் ஏழுஎட்டுப்பேர் நுழையவும், என்ன விசயமாக இருக்குமென எண்ணி திரும்பிப் பார்த்தான் இன்னும் சிலர் படிகளில் கூடி நிற்பதையும் கண்டான்.

காலையில் கண்ட பெண் விடயமாக வந்தவர்கள் விசாரித்தார்கள் சங்கரனை, அவர்கள் ஆழுக்காள் விதம் விதமாகப்பேசி பிரச்சனையை வளர்த்துக்கொண்டு, ஏதோ கவலைப்படுபவர்கள் போல முகத்தை வைத்துக்கொண்டிருந்தார்கள். சங்கரன் நிதானமாக உடைமாற்றிக்கொண்டு 'சோபாவில்' அமைதியாக நிதானமாக இருந்து கொண்டு அவள் நினைவால் முகத்தில் ஏற்பட்ட புன்னகையோடு அவளைப்பற்றி விபரம் சொன்னான். அவள் சம்பவ இரவு 'டிஸ்கோ' வந்தவள் என்றும், தன்னோடு சில காலம் வேலை செய்தவள் என்றும் அதனால் தான் தன் அறையில் தங்க இடம் கொடுத்ததோடு அவள் பணமுடையில் இருந்தால் நூறு 'டொச் மார்க்' கொடுத்ததாகவும், அவளது குண நடைகளைப்பற்றியும் விபரித்தான்.

குற்றங்கள் அவன்மேற் சுமத்தி அவனை கையும் களவுமாய் பிடித்து விட்டதாக எண்ணி வந்தவர்கள், அவன் தலை குனிந்து போகின்றான் அவனை எச்சரிக்கலாம் என எதிர்பார்த்தவர்கள், அவனது அக்கறையின்மையும் துணிவையும் கண்டு திகைப் பூண்டு மிதித்தவர்களானார்கள். கடைசியாக ஒருவர் அவன் முன்னே பணிவாக வந்து தம்பி நீர் எக்கேடும் கெட்டுப்போம். ஆனால், கண்ட பெண்களையும் 'அப்பாமென்ற்'க்கு கூட்டி வந்து இந்த வீட்டுப்பெயரை கெடுக்க வேண்டாம் என்று வேண்டிக்கொண்டார். சங்கரன் சாதாரணமா ஒரு 'சிகரெட்டை' பற்ற வைத்துக் கொண்டு பதில் சொன்னான். நீங்களும் என்னை மாதிரி இந்த வீட்டில் குடியிருக்கிறவர்கள் தானே எனக்கு இல்லாத அக்கறை இந்த 'அப்பாட்மென்றில்' உங்களுக்கு மட்டும் எதற்கு ஏதாவது சொல்றது என்றால் இந்த வீட்டுச் சொந்தக்காரர் வந்து சொல்லட்டும். நீங்கள் போகலாம் என்றான் சங்கரன். அவன் தயவு தாட்சணிய மற்று பேசுவது கேட்டு அவனை விலகி ன்றுவிட்டனர்.

இவ்வளவுக்கும் காரணமான பக்கத்து அறை சபாநாதன் மட்டும் அந்த கும்பலோடு செல்லாமல் ஏதோ புதினம் பார்ப்பவர் போல் சங்கரனை முறைத்து பார்த்தவாறு நின்றிருந்தார். அவர் மனம் சில நாட்களுக்கு முன் சங்கரனுக்கு வந்த கடிதத்தில் அவனது தாய் தந்தையர்கள் அவனைக் கல்யாணம் செய்து கொள்ளும்படியும் அதற்காக அவர்கள் பெண் பார்ப்பதாகவும் இவன் மட்டும் சம்மதம் கேட்டு எழுதி இருந்ததை நினைத்து, சங்கரன் தன் வீட்டுக் கடிதங்களை சபாநாதனுக்கு காட்டுவதுண்டு. இவன் பாவி அந்த அன்பான தாய் தந்தையரை நிராகரித்து விட்டு பணத்தையும் பாழாக்கி உடம்பையும் கெடுத்துக் கொண்டு கெட்ட பெயருக்கு ஆளாகும் இவனை எண்ண ஆத்திரமும் பரிதாபமுமாக இருந்தது. அவனை என்னனென்னவோ கேட்க வேண்டும் போல் இருந்தாலும், அவர் வாயில் வந்த வார்த்தை 'நூறு மார்க்' 'ஏன் சங்கரன் வீணாய் நூறு மார்க் கொடுத்தீர். என்று மனம் தாங்காது கேட்டுவிட்டார். அவருக்கல்லவோ தெரியும் அதன் அருமை.

ஐம்பது வயதாகும் சபாநாதன் கடந்த பத்து வருடங்களாக ஊரில் இருக்கும் தன்குடும்பத்தாருக்காக, 'அல்டி' மீன் றின்னும், செஞ்சிலுவை நிறுவன உடுப்புமாக சிக்கனம் பார்த்து வாழும் அவருக்கு 'நூறு மார்க்' என்றால் சும்மாவா, அந்த மகத்தான நூறு மார்க்கை ஓர் இரவு வந்து உறவாடிச் செல்லும் எவளோ ஒருத்திக்கு கொடுக்கும் சங்கரனின் ஊதாரித் தனத்தையும் அவரால் தாங்க முடியவில்லை.

இந்தா பாரும் நான் சொல்றன் என்று கோவிக்கக்கூடாது, பின்னால அவதிப்படப் போறீர் இப்படி அறியாயம் செய்யிறது சரியில்லை. நீரே சில நேரங்களில் கஷ்டப்படுகிறதை பார்த்திருக்கிறேன். கடினப்பட்டு உழைக்கிற பணத்தை இப்படி ஒழுக்கங்கெட்ட காரியத்தில் வாரி இறைக்கிறதுக்கு எப்படி மனம் வருது. என படபடத்து பேசிக்கொண்டிருக்கும் போது கதிரையில் இருந்து எழுந்த சங்கரன் அந்திப்பொழுது கடந்துவிட்ட நிர்மலமான கருவானம் பார்த்து அதன் தூயதன்மையை பார்த்து ஏதோ நினைத்தவனாக சிரித்தவாறே சொன்னான். அண்ணை நீங்க என் கோணத்தில் இருந்து பார்த்தால் என் காரியம் என்வரைக்கும் சரி என்று தோன்றும்.

யார் கோணத்தில் இருந்து யார் பார்த்தாலும் விபச்சாரம் பண்றது சரியாகாது. நீ கண்ட பெண்களோட தொடர்பு வைக்கிறது சரியும் இல்லை நியாயமும் இல்லை. அவ்வளவுதான் எனக்குத்தெரியும் என்று கூறி மறுபக்கம் திரும்பிக் கொண்டார்.

அவர் சில வினாடிகள் மெளனமாக இருந்தார். சங்கரனும் ஏதோ சிந்தனையுடன் சிகரெட்டை இழுத்து அவருக்கு புகைபடாமல் ஊதினான். பிறகு 'ஆஸ்ரேயில்' சிகரெட் துண்டை நெரித்து அணைத்தவாறு சபாநாதனிடம் கேட்டான், அண்ணன் உங்களுக்கு எத்தனை வயதில் கல்யாணமாச்சு? அதுக்கென்ன இப்போ என்று சிடுசிடுத்தார் சபாநாதன். சொல்லுங்கோவன் என்று கூறி கையில் இருந்த பத்திரிகையை அவர் முன் இருந்த மேசை மீது போட்டுவிட்டு, ஒரு கனமான புத்தகத்தை தேடி எடுத்தான் தனது புத்தக அலுமாரியில் இருந்து. சபாநாதன் தனக்கு முன்னே இருந்த பத்திரிகையை தட்டியவாறே எனக்கு இருபத்தியொரு வயதில் கல்யாணமாச்சு என்றார்.

அப்போது சங்கரன் 'ம்' உங்களுக்கு இருபத்தியொரு வயதில் கல்யாணமாச்சு எனக்கு இப்போ முப்பத்தியேழு வயது அண்ணன் என்று கூறவும் அதைக்கேட்டு ஆவேசம் வந்தவர்போல் கத்தினார் சபாநாதன். என்ன ஆளப் பாறீர் பத்து நாளைக்கு முன்கூட உம்மட தாயும் தகப்பனும் கொழும்பில நின்று ரெலிபோன் எடுத்து எவ்வளவு கெஞ்சி கேட்டவை உமக்கு கலியாணம் பேசிறம் உமது சம்மதம் என்ன மாதிரி என்று. நீர் விடாமல் மறுத்துவிட்டீரே. நான் கேட்டுக்கொண்டு தானே இருந்தன் இப்ப என்னடா என்றால் எனக்கு வயசு முப்பத்தியேழு ஆச்சு கல்யாணம் ஆகல்ல அதனால் அரிந்து போறன் என்று காரணம் சொல்றீரோ? சரி சொல்லும் நீர் ஏன் கல்யாணம் வேண்டாம் என்று பிடிவாதம் பிடிக்கிறீர் என்றார் தனக்கு வந்த ஆத்திரத்தை அடக்கிக்கொண்டு.

சற்றும் நிதானம் தவறாத சங்கரன் தொடர்ந்தான், சபாநாதன் அண்ணே என்ர எண்ணங்களை

தொடர்ச்சி 23ம் பக்கம்...

# கவிதைகள் உலகம்

## வாலிபமே வாழ்ந்துவிடு

ஓ.....
வாலிபச் சிட்டுகளுக்காக சில
வரிகள்.
வாலிப நதியே.....
வழிதவறிப் பாய்வது ஏனோ?
வாலிபத்தில் வாழ்ந்திட வேண்டிய - நீ
வீழ்ந்திடலாகுமோ?
உன்... சிறகுகளை
போதைக்குள் சிறையிடாதே!!
சிந்தனைக்குள் அதையிடு
மதுவுக்குள் மடிந்து
மாதுவின் மயக்கத்தில் விழுந்து
மரணிக்கவா நீ பிறந்தாய் - இல்லை
உந்தன்... உடலை
மண்ணுக்கு உரமிட்டு
உன்... மூச்சை
தமிழுக்கு நீ விட்டு
தமிழனாக வாழ அல்லவா
நீ பிறந்தாய்
ஓ......
வாலிபமே வாழ்ந்து விடு
வீழ்ந்து விடாதே!!!

-தமிழ்தாசன், அல்ஸ்பில்ட், ஜெர்மனி-

## அஆஇஈஉஊஎஏஐஒஓஔஃ

அன்பு அது வைத்துவிட்டால்
பிரிவு உனை வாட்டிவிடும்
ஆசை அது வளர்த்துவிட்டால்
குறுக்கு வழி நாடவைக்கும்
இன்பம் அதை நினைத்தால்
துன்பம் அது நிழல்போல் தொடரும்
ஈன்றவர் மேல் பாசம் வைத்தால்
இழப்பு உனை வாட்டிவிடும்
உண்மையினை உரைப்பதென்றால்
உலகினிலே இடமில்லை
ஊமையாக இருந்துவிட்டால்
உண்மையது தெளிவதில்லை.
எளிமையாக நீ நடந்தால்
நளினம் அது தலைதூக்கும்
ஏழ்மையினை நீ அடைந்தால்
பெற்ற பிள்ளைகூட சொந்தமில்லை
ஐம்புலன்களை அடக்குவதென்றால்
இந்திரனாலேயே முடியவில்லை.
ஒற்றுமையா இருக்க நினைத்தால்
பொறாமை வந்து பிரித்துவிடும்
ஓர்மார்க்கம் இல்லையா
மானிடனின் நிம்மதிக்கு
ஔவை அவள் மார்க்கம் அதை
சன்னியாசம் என்றுரைத்தாள்
இஃது தான் மார்க்கம் என்றால்
மண்ணுலகம் என்னாகும்.

-பதி, இடைக்காடு - ABIA-

## காலம் சீராகட்டும். தாலி கட்டுகிறேன்!

ஆவணி அவதிப்படுகிறது
அதற்குள் எதற்கடி திருமணம்
காதலித்த எத்தனையோ வாலிபர்கள்
சிறைச்சாலையில் காத்து இருக்கிறார்கள்
அதற்குள் கல்யாணம் உனக்கொரு கேடா
கல்யாணம் முடிந்து காலாண்டு கழிவதற்குள்
நீ கர்ப்பிணியாகி விடுவாய்
காலனவன் என்னைத்தேடி கயிறு வீசினால்
நீ விதவை வேசம் போட்டு வீதியெல்லாம்
உலா வரப்போகிறாயா?
துணை இல்லாதவள் என்று உன்னைத்
தொட்டுப்பார்க்க தூறல் மழைக்கு முளைக்கும்
சின்னஞ்சிறு காளான்கள் கூட உன்னைத்தேடி வரும்
உனக்கேன் வீண் வம்பு
காதலித்தது உண்மைதான் ஆனால்
காலம் கெட்டுக்கிடக்கு
மஞ்சள் கயிறு கட்டி உன்னை
மனைவியாக்கி மறுதினமே
சீ வேண்டாம், காலம் சீராகட்டும்
உன் கழுத்தில் கட்டுகிறேன் தாலி.

-தெ. மகிழ்தினி, பெரியதம்பனை-வவுனியா-

## என்ன நடக்குது?

எங்கள் நாட்டில்
என்ன நடக்குது?
ஏழை வயிறு
பற்றி எரியுது
ஏய்ப்பவர் கண்கள்
துழாவிப் பார்க்குது
வலிகாமம் சந்தையில்
வரிசைகள் நீளுது
கண்களில் வழியும்
கண்ணீரை நாக்கினால்
வளைத்து நக்கியும்
பார்த்து உப்புக்
கரித்திட சப்புக்கொட்டி
நாழிகைக் கணக்கில்
எம்தமிழர் வேதனை
கொள்கின்றார் ஊரிலே!
நீதியின் கண்கள்
மீளமர்ந்தோர் வாழ்வினிலே
சாவின் எண்ணமே
நாளும் பொழும்...
பேரினப் பேய்கள்
தூக்கிய துவக்குகள்
நெஞ்சினை நோக்கியே
அடிமையின் கோலம்
தெளிவெனத் தெரியுது
மோதியும் பார்த்து
முரண்டு பிடித்து
பட்டினி போட்டும்
பசியினைப் பொறுக்கா
அப்பாவித் தமிழர்களை
இராணுவக் கட்டுப்பாட்டில்
கைதியாய்க் கட்டியிழுத்து
வந்தனர்... வந்தவர்
படும் பாடுகளை
பாடவோ கண்ணிர்
அடக்குமுறை ஆட்சியின்
வேசத்தை மோசத்தை
வெளிநாடுகள் நம்பிட
சினிமா காட்டுகின்றார்!
யார் நம்பினார்...?
குரவலை நெருக்கிக்
குருதியும் சிந்தும்
யாழ் வந்தமர்ந்த
தமிழரின் அவலம்...
சொல்லோனாத் துயரம்
ஐயகோ... மீண்டும்
தமிழன் அடிமையா...?

-கவிஞர்- கி. கிறிஸ்ரியன், பரிஸ்-

## ஓ... இளைஞனே...!

இளைஞனே!
உன் "கரம்"
உயர்ந்தால்தான்
நாட்டின் -
"தரம்"உயரும்!

-ரிஷிவந்தியா-



# ஈழப்பூர்வீக வரலாறு!

## அத்தியாயம் 2 - செ. பரராசசேகரம்

### அகிம்சைப் போராட்ட ஆரம்பம்

1956 இல் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சிங்கள -பௌத்த பிரச்சாரத்துடன் எஸ். டபில்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவின் தலைமையில் அரசு அமைத்ததும் முதல் கட்டமாக 'சிங்களம் மட்டும்' மசோதா அதிக வாக்குப் பலத்தால் நிறைவேற்றியது. இச் சட்டத்தை எதிர்ந்து கொழும்பு பாராளுமன்ற கட்டிடத்தின் முன் சாத்வீக போராட்டம் ஒன்றை தமிழரசுக்கட்சியினர் ஆரம்பித்தனர். அமைதியாக குழுமியிருந்த சாத்வீக வழியில் நின்ற தலைவர்கள் தொண்டர்கள் மீது சிங்களக் காடையர்கள் ஏவப்பட்டனர். காடையர்களால் சத்தியாக்கிரகிகள் தலைவர்கள் உட்பட தாக்கப்பட்டும் காயப்பட்டும் கொடுமைப் படுத்தப்பட்டனர். கிழக்கு மாகாணத்தில் அம்பாறையில் கல்-ஓயா திட்டத்தில் குடியமர்த்தப்பட்ட சிங்களவர்கள் நூற்றுக்கணக்கான தமிழர்களை கொன்றனர். இதனால் ஏற்பட்ட தமிழர்களின் ஆர்ப்பாட்டங்களையும் சிங்களவர்களின் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களையும் கண்ட திரு. பண்டாரநாயக்கா அவர்கள் 1957 ஜுலையில் பண்டாரநாயக்கா-செல்வநாயகம் என்ற முதல் முதலான எழுத்தில் கொடுக்கப்பட்ட ஒப்பந்தம் உருவாகியது. தமிழைத்தேசிய மொழியாகவும் வடகிழக்கு மாகாணத்தில் நிர்வாக மொழியாகவும், வடகிழக்கு மாகாணங்களில் மாநில சபைகளின் நிர்வாகமும் இருக்கும் என்று ஏற்கப்பட்ட நிலையில் அமுலுக்கு வராத அந்த ஒப்பந்தத்தை திரு. பண்டாரநாயக்கா அவர்கள் புத்தபிக்குகளின் அழுத்தத்தாலும், நெருக்கடியாலும் கிழிந்தெறிந்தார். இதனால், தொடர்ந்து வந்த சாத்வீக போராட்டங்களின் விளைவாகவும், 1958 இல் இலக்கலவரம் ஆரம்பமானது. ஆயிரமாயிரம் கொலைகள், கொள்ளைகள் போன்ற இன்னல்களுக்குத் தமிழர்கள் தள்ளப்பட்டனர். கொழும்பில் இருந்து கப்பல் மூலம் யாழ்ப்பாணத்திற்கு தமிழர்கள் அனுப்பப்பட்டனர்.

ஒரு வருடத்திற்குள்ளேயே திரு. பண்டாரநாயக்கா தமது புத்தபிக்கு ஒருவரால் சுடப்பட்டு இறந்தபின் அவரது மனைவி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா பிரதமமந்திரியாக வந்தார். அவர் வந்ததும் சிங்களம் மட்டும் சட்டத்தை தீவிரமாக அமுல் படுத்த முனைந்தார். இதை ஆட்சேபித்து சாத்வீக போராட்டம் மீண்டும் ஆரம்பமானது. இவைகள் யாவும் தந்தை செல்வா அவர்களின் தலைமையில் உள்ள தமிழரசு கட்சியின் மூலமே என்பது குறிப்பிடத்தக்கது. 1961 இல் யாழ்ப்பாணத்தில் தனியான தபால் சேவையை ஆரம்பித்து இதற்கென அச்சிடப்பட்ட தபால் முத்திரைகளும் வெளியிடப்பட்டன. இதையடுத்து அவசரகால நிலைமை பிரகடனப் படுத்தப்பட்டது. அத்துடன் தமிழரசு கட்சியும் (சமஸ்டி கட்சி) அரசால் தடைசெய்யப்பட்டது. இதுபோன்றே வாகனங்களில் சிங்கள ஸ்ரீ எதிர்ப்பும் ஆரம்பமானது. தமிழ் பிரதேசங்களில் சிங்கள எழுத்துக்களெல்லாம் தார் பூசப்பட்டன. சிங்கள பிரதேசங்களில் தமிழ் எழுத்துக்கள் அழிக்கப்பட்டன. தமிழ் தலைவர்கள் சிறைகளிலும் தடுப்பு காவல்களிலும் வைக்கப்பட்டனர்.

1974 இல் யாழ்ப்பாணத்தில் தமிழாராய்ச்சி மகாநாட்டின் போது அரச வன்முறையால் 11 தமிழர்கள் உயிரிழந்தனர். 1976 இல் தான் முதன்முதலாக தமிழ் இளைஞர்கள் அரசிற்கு எதிராக ஆயுதம் ஏந்தி வன்முறையை நாடினர். எல்லா வழிகளிலும் நிவாரணம் மறுக்கப்பட்டதால் ஈற்றில் எல்லா தமிழ் கட்சிகளும் சேர்ந்து தனிநாடு கோரும் தீர்மானத்தை வட்டுக்கோட்டையில் 1976 இல் ஏகமனதாக ஏற்றுக்கொண்டனர்.

இத்தருணத்தில் இக்கருத்தை பலகாலத்திற்கு முன் சி. சுந்தரலிங்கமும், வி. நவரத்தினமும் பகிரங்கமாக வலியுறுத்தியதை நினைவில் கொள்ள வேண்டும். இப்பிரகடனம்தான் வட்டுக்கோட்டைத் தீர்மானம் என்று அழைப்பர். அப்பொழுதே தமிழர் விடுதலைக்கூட்டணி உருவாகியது. 1977 இல் அனுராதபுரத்தில் தொடங்கிய இனக்கலவரம் மலையக பிரதேசங்கள் உட்பட பிற பகுதிகளுக்கும் பரவியது. ஆயிரக்கணக்கான தமிழர்கள் தமிழ் பிரதேசங்களில் குறிப்பாக வவுனியா, மன்னார் போன்ற இடங்களுக்கு இடம் பெயர்ந்தனர்.

1981 இல் இலங்கை கடற்படையினரால் திட்டமிட்ட தூறையாடலில் யாழ்ப்பாண முக்கிய பகுதி எரிக்கப்பட்டது. யாழ்ப்பாண நூலகமும் தீக்கிரையாக்கப்பட்டு அரிய நூல்கள் ஒரு லட்சம் அளவு எரிக்கப்பட்டன. இதைத் தொடர்ந்து 1983 இல் பாரிய இனக்கலவரம் ஏற்பட்டு தமிழ் பகுதிகளில் இருந்து தமிழர்கள் அகதிகளாக வெளிநாடுகளுக்கு செல்லவேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டது. இதன் பின் தமிழரசியல் கட்சிகள் எவற்றாலும் தொடர்ந்து போராட்டங்களை நடத்த முடியாதவாறு தமிழ்விடுதலைப் போராளிகளே இப்பணியை வன்முறையில் ஆரம்பித்தனர்.

### வன்முறை போராட்ட ஆரம்பம்!


நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக இலங்கைத்தமிழர்கள், சிங்கள பேரினவாத சக்திகளால் அடக்கி ஒடுக்கப்பட்டதால் அதிலிருந்து விடுபட தமிழர் உரிமைகளுக்காக ஈழமக்கள் முதலில் ஜனநாயக வழிகளிலும் பின்பு வன்முறைகளிலும் போராட வேண்டிய நியாயத்தை எவரும் குறைகூற முடியாது. இவ்வகையில் போராடும் மக்கள் தமிழ் கோரிக்கைகளை வென்றெடுப்பதற்கு பன்னாட்டு ஆதரவும் அங்கீகாரமும் அவசியம் என உணர்ந்தனர். முதற்கட்டமாக தமிழகத்திலும் ஏன் முழு இந்தியாவிலும் இதைப்பெற முற்பட்டனர். இதன் மூலம் முழு இந்தியாவின் ஆதரவைப்பெறுவது சுலபம் என எண்ணினர். இவர்களில் ஈழத்தமிழ் தலைவர்களும் ஈழ போராளிகளும் வேற்றுமையின்றி முன்னின்றனர். இவர்களின் செயற்பாடுகளை ஆராய்வோம்.

1983 ஆம் ஆண்டு முதல் நடந்த தமிழர்களின் சோகக்கதையைக் கேட்டு தமிழ் நாட்டு மக்கள் கொந்தளித்தார்கள். ஆர்ப்பாட்டங்களை நடாத்தினர். அந்நேரம் தமிழகக் கட்சிகளுடன் கூட்டாட்சி வைக்க வேண்டிய நிலைமை இந்திய மத்திய அரசுக்கு இருந்தது. அதே வேளை இலங்கை அரசு ஈழத்தமிழர் சார்பில் நடைபெற்ற பலவிதமான போராட்டங்களையும் அடக்குவதற்

*தொடர்ச்சி 22 ம் பக்கம்...*

### வாசகர்களுக்கோர் போட்டி!

இந்தப் படத்திற்கேற்றவாறு, சுருக்கமாக எமது நாட்டு நடப்பை மையமாக வைத்து, ஒரு நகைச்சுவை எழுதி அனுப்புங்கள் பார்க்கலாம். சிறந்ததாக தேர்ந்தெடுக்கப்படும் நகைச்சுவைக்கு 10 DM பரிசு காத்திருக்கிறது. முடிவு திகதி 20. 09. 96.



## சந்திரிகா...

*இலங்கை ராணுவ அதிகாரி சரத்முனசிங்கே கொழும்பில் நிருபர்களிடம் கூறியதாவது: மன்னார் மாவட்டம் பாசாலையில் இருந்து அகதிகளாக வெளியேறுவதாக வரும் தகவல்களை எங்களால் உறுதிப்படுத்த முடியவில்லை. ஏன் என்றால் நாங்கள் அங்கு ராணுவ நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. அந்த பகுதியிலிருந்து தமிழர்கள் வெளியேறக்காரணம் எதுவும் இல்லை.*

*அதே சமயம் கிளிநொச்சி மாவட்டத்தில் எங்களது ராணுவ நடவடிக்கை தொடர்ந்து நடந்து வருகிறது.*

*கடந்த 5 ஆண்டுகளில் ராணுவத்திலிருந்து 15 ஆயிரம் சிப்பாய்கள் தப்பி ஓடிவிட்டனர். அவர்களுக்கு பொதுமன்னிப்பு அளிக்கப்படும் என்று அறிவித்ததையொட்டி 4 ஆயிரம் சிப்பாய்கள் திரும்பி வந்துவிட்டனர். இதற்கான காலக்கெடு முடிந்துவிட்டதால் மற்றவர்களை கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது. 2 அதிகாரிகள் உள்பட 311 சிப்பாய்கள் கைதாகி உள்ளனர்.*

*கிழக்கு அம்பாறை மாவட்டத்தில் நிலக்கண்ணிவெடிகளை செயலிழக்கச்செய்யும் பணியில் தமிழர்களை ராணுவத்தினர் பயன்படுத்தி வருவதாகவும் இதில் கந்தப்பன் (வயது 67) என்பவர் பலியானதாகவும் ஈழ மக்கள் புரட்சிகர முண்ணனி என்ற போராளி அமைப்பு குற்றம் சாட்டி உள்ளது.*

*இதற்கிடையே கொழும்பு வந்துள்ள அமெரிக்க தூதர் வில்கோஸ் பயங்கரவாத நடவடிக்கைகளை கண்டிப்பதாகவும், புலிகள் இயக்கத்திற்கு ஆதரவு அளிக்கமாட்டோம் என்று உறுதி கூறியதாகவும் இலங்கை அரசு தெவித்துள்ளது.*

## இலங்கையில் 7 பொலீசார் கைது!

இலங்கை போலீசார் பயங்கரவாத எதிர்ப்பு இயக்கத்தைச்சேர்ந்த 7 காவல் துறையினரைக் கைது உள்ளனர். அந்த 7 பேரும் 3 அப்பாவித்தமிழர்களைக் கொன்று எரித்து விட்டதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது. 1 வாரத்தில் நடந்த 2 வது கைது சம்பவம் இது. இதேபோன்று கடந்த சனிக்கிழமை 4 காவலர்கள் 3 பெண் அதிகாரி ஆகியோர் அப்பாவி தமிழர்களை கொடுமைப்படுத்திய குற்றத்திற்காக கைது செய்யப்பட்டனர்.




# 'குடிப்பதற்கு ஏதாவது காரணம் சொல்லும், இந்த ஆண்களை திருத்தவே முடியாதா?'

வருடம் - 03
ஆண்டு - 1996
குழந்தை - 28

**குடிப்பதற்கு ஏதாவது காரணம் சொல்லும், இந்த ஆண்களை திருத்தவே முடியாதா?**

-சங்கீதாப்பிரியன், ஜெர்மனி-

ஒருவன் ஒரு மதக்குருவை சந்தித்து கேட்டான்.
'நான் பேரிச்சம் பழத்தை சாப்பிட்டால் மதக் கோட்பாட்டைப் புறக்கணித்தவன் ஆவேனா?"
"இல்லையே..."
"மேலும் சிறிது காபியை சாப்பிட்டால்..."
"தவறில்லையே! சாப்பிடலாமே!"
"அதோடு கொஞ்சம் நீர் அருந்தினால்"
"இதுவும் தவறில்லை...!"
"இந்த மூன்றும் சேர்ந்து தானே பேரீச்சம்பழ மது! அதை மட்டும் ஏன் அருந்தக் கூடாது குருவே?"
குரு கேட்டார்.
"கொஞ்சம் மண் எடுத்து உன் தலையில் போட்டால் உனக்கு வலிக்குமா?"
"வலிக்காது குருவே!"
"கொஞ்சம் நீர் ஊற்றினால்"
"அப்பவும் வலிக்காது குருவே"
"இரண்டையும் சமவிகிதத்தில் கலந்து சுட்ட செங்கல் ஆக்கி உன் தலையில் போட்டால்?"
"மண்டை பிளந்துவிடும் குருவே"
"அப்புறம் என்ன? உன் கேள்விக்கு விடை கிடைத்து விட்டது!" என்றார் குரு.

**மனதில் ஒன்று வைத்து வெளியில் நல்லவர்கள் போல் கதைப்பவர்கள் பற்றி உங்கள் கருத்தென்ன?**

-மதி சண்முகராஜா, டியூரன் -

மூன்று பேர் கடலுக்கு ஒரு படகில் மீன் பிடிக்கப்போனார்கள். திடீரென்று புயலடித்து படகு உடைந்து ஒரு குட்டித்தீவில் ஒதுங்கினார்கள். ஆள் நடமாட்டமில்லாத அந்தத்தீவில் இவர்களுக்குச் சாப்பிட எதுவும் கிடைக்கவில்லை. இறைவனை வேண்டினார்கள்.
ஒரு தேவதை வந்து என்ன வரம் வேண்டுமானாலும் தருகிறேன் என்றது. இது தான் சந்தர்ப்பம் என்று பெரிய வரமாகக் கேட்டான் ஒருவன். "நான் அமெரிக்காவில் தொழிற்சாலை தொடங்க வேண்டும்" என்றார். வரம் கொடுத்து தேவதை அவனை வான் வழியே அனுப்பி வைத்தது. இரண்டாவது ஆளும் சுதாரித்துக்கொண்டான். "இங்கிலாந்து நாட்டில் போய் தொழில் தொடங்க வேண்டும்" என்றான். வரம் கிடைத்துப் புறப்பட்டு விட்டான். மூன்றாவது ஆள் ஈழத்தமிழன். இவன் மனதில் என்ன வைத்துக் கொண்டு கேட்கப்போகிறானோ என்று தேவதை காத்துக்கொண்டிருந்தது. அவன் என்ன கேட்டான் தெரியுமா? "அவங்க இரண்டு பேரையும் திரும்ப இந்தத் தீவுக்கே கொண்டுவரணும்" என்றான். வரம் கிடைத்து கொஞ்ச நேரத்தில் இருவரும் மீண்டும் அங்கேயே வந்து விட்டார்கள். இதனால் யாருக்கு நன்மை?

**கொசுறுக் கேள்வி ஒன்று. இளைஞனுக்கு (தங்களுக்கு) காதல் கடிதங்கள் வருவதுண்டா?**

-நிரஞ்சன், ஜெர்மனி-

எங்கேயோ கொண்டுபோய் மாட்டிவிடப் பார்க்கிறீங்க போலிருக்கு...
இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் ஒரு புதிய அறிவிப்பாளர் வேலைக்குச் சேர்ந்தார்.
முதல் நாளே திறமையாக தன் கம்பீரமான குரலால் நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கினார்.
அடுத்தநாள் வானொலி நேயர்களிடமிருந்து எக்கச்சக்கமான கடிதங்கள் இவருக்கு வந்து குவிந்தன.
அதில் பல காதல் கடிதங்களும் அடக்கம்.
கலையரசி என்ற ஒரு ரசிகை கொஞ்சம் அதிகமாகவே இவரின் குரல்



வளத்தை பாராட்டி தேனொழுக கடிதம் எழுதியிருந்தார்.
இவருக்கு அந்தக்கடிதத்தை வாசித்தலிருந்து கலையரசியை சந்திக்கும் வாய்ப்பு கிடைக்குமா என்று ஏங்கத் தொடங்கினார்.
சொல்லிவைத்தாற்போல் கலையரசி வாழும் ஊரான கிளிநொச்சிக்கு ஒரு நிகழ்ச்சிக்காக செல்ல நேரிட்டது. அந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி கலையரசி வாழும் வீட்டைக்கண்டுபிடித்துப் போனார்.
வாசலில் ஒரு அழகான சிறுமி கோலம் போட்டுக் கொண்டிருந்தாள்.
அவளிடம் "கலையரசி வீடு இதுதானா? அவங்க வீட்டில இருக்காங்களா? உன் பெயர் என்ன?" என்று வினாவினார்.
அதற்கு அந்தச்சிறுமி: "என் பெயர் தமிழ்ரோஜா - கலையரசி உள்ளேதான் இருக்கிறாங்க, கூட்டிவருகிறேன்" என்று கூறிவிட்டு உள்ளே ஓடினாள்.
ஒலிபரப்பாளர் கற்பனையில் மூழ்கலானார். "தங்கச்சி தமிழ்ரோஜாவே பெயருக்கேற்றவாறு இவ்வளவு அழகாக இருக்கிறாள் என்றால், இவளின் அக்கா கலையரசி -கலைகளுக்கெல்லாம் அரசி அவள் எவ்வளவு அழகாக இருப்பாள்" என்று சிந்தனையிலிருந்தவர் —
"டக்..... டக்....." என்ற சத்தம் வந்த திசையை ஆசையோடு பார்க்க, அங்கே 80 வயதான ரசிகை கலையரசி ஊன்றுகோலின் உதவியோடு இவரை நோக்கிவந்து கொண்டிருந்தார்.
இளைஞனுக்கும் (எனக்கும்) நிறையவே காதல் கடிதங்கள் வருகின்றன. ஆனால், அந்த ஒலிபரப்பாளர் போல அசடு வழிய நான் தயாரல்ல.

**வெளிநாட்டு அகதிகளுக்கும் (ஐரோப்பா), உள்நாட்டு அகதிகளுக்கும் (தமிழீழம்) என்ன வித்தியாசம்?**

-ராஜா சிவகுமார், டியூரன்-

தமிழீழம் - ஏழை அகதிகள்.
வெளிநாடு - பணக்கார அகதிகள்.

தொடர்ச்சி 23ம் பக்கம்...

## ஓ... இளைஞனே...!



உன் தலையெழுத்தை
மாற்றலாம் என நம்பு!
உன் தலைமுறையே
மாறி விடும்!

-கீதா-

## முக்கிய அறிவித்தல்!

பரீஸ்சில் "இளைஞன்" பற்றிய சகல தொடர்புகளுக்கும் - வண்ணை தெய்வம். 212, Aue. du 8mai 1945, 93150 -Blanc Mesnil, France, Tel: 48 67 01 25 என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

## இதுதான்...

பணக்காரர் இவர்தான். (எல்லாம் மண்ணிலிருந்து அகழ்தெடுக்கும் எண்ணெயின் மகிமை)
பணம் மிதமிஞ்சினால் என்ன செய்வது? வீசிக் கொட்ட வேண்டியதுதான். கொட்டியிருக்கிறார் சுல்தான்!
25 மில்லியன் டாலரை வீசி, பெரும் உற்சவத்திற்கு ஏற்பாடு செய்திருக்கிறார். (இதற்குள் மைக்கல் ஜாக்சனின் மூன்று பாடல் நிகழ்ச்சிகளும் அடங்கும்)

இதோடு விட்டாரா?

தன்னுடைய 285,000 பிரஜைகளுக்கு அன்பளிப்பாக பல பில்லியன் டாலர்கள் செலவில், இலவச அனுமதியுடன் கூடிய பிரமாண்டமான பூங்காவொன்றை நிர்மாணித்துக் கொடுத்திருக்கிறார்.

சரி... இப்படியெல்லாம் செய்ய, சுல்தானுக்கு அப்படி என்ன குஷி வந்துவிட்டது என்று கேட்கிறீர்களா?

தன்னுடைய 50 வது பிறந்த தினத்தைக் கொண்டாடத்தான் இத்தனை ஆர்ப்பாட்டமும்! படத்தில் கூட இருப்பவர் இரண்டாவது மனைவி! (ஏ. ஜே. ஜி)

## ஈழப்...

காக மேற்கத்திய நாடுகளின் உதவிகளையும் நாடியது. அருகிலிருந்த இந்தியாவை தனது உதவிக்கு வரும்படி கேட்கவில்லை. ஆகவே இவற்றை சாட்டாகவும் உள்நோக்கமாகவும் கொண்டு இந்தியா ஈழத்தமிழர்களின் பிரச்சனைகளில் அக்கறை காட்ட தீர்மானித்தது. பெருமளவில் அகதிகளை அனுமதித்ததுடன், ஈழப் போராளிகளுக்கும் ஆதரவு தந்து அதே நேரத்தில் அவர்களுக்கும் இலங்கை அரசுக்கும் இடையே சமாதான முயற்சியிலும் பலமுறை ஈடுபட்டது.

தொடரும்.....

## நம்பினால் நம்புங்கள்

'நம்பினால் நம்புங்கள்' பகுதியில் வரும் 'மிஸ்டர் அவதானி'யின் அவதானிப்புகள் யாருடைய மென்மனதும் புண்படுவதற்காக எழுதப்படுபவை அல்ல. எம்மை நாமே மாற்றிக்கொள்ளவும், கொஞ்சம் சிந்திக்கச் செய்வதுமே அவதானியின் ஆணித்தரமான நோக்கமாகும். -ஆ-ர்-

அவன் எனது நண்பன். இரண்டு வருடங்களுக்கு முன்பு, கிளிநொச்சியில் வாழும் தனது சகோதரியின் திருமணத்திற்காக சுமார் 25, 000, -DM (ஜெர்மன் மார்க்) அனுப்பி வைத்தான்.
திருமணத்திற்கு இவ்வளவு பணம் எதற்கு என்றா கேட்கிறீர்கள்? ஒரு (வலது குறைந்த) மாப்பிள்ளையின் விலை இவ்வளவு போகிறதாம் இப்போது அங்கு.
வருடங்கள் ஓடியது. மாப்பிள்ளைக்கு வேலை செய்ய விருப்பமில்லை. சீதனப்பணம் இருக்கிறதல்லவா? பிறகெதற்கு வேலை செய்து சக்தியை வீணாக்க வேண்டும்.
சகோதரி அடிக்கடி வெளிநாட்டுத் தம்பிக்கு கடிதம் போடுவாள். சகோதர பாசத்தில் அல்ல, பணப்பாசத்தில். அவனும் சகோதரிதானே என்று கேட்கும் பொழுதெல்லாம் அனுப்பிக் கொண்டிருந்தான்.
கடைசியாக வந்த கடிதத்தில் அவள் எழுதியிருந்தாள். 'தம்பி! சீதனமாக எமக்கு தந்த காணி வெறுமையாக இருக்கிறது. அதில் ஒரு வீடு கட்ட "அவர்" ஆசைப்படுகிறார். இன்னும் ஒரு 10, 000, -DM தேவைப்படுகிறது. உடனே "உண்டியல்" மூலம் அனுப்பி வைக்கவும்" என்று எழுதியிருந்தாள்.
அவனும் யார் யாரிடமோ கடன் பட்டு சகோதரியின் அன்புத்தொல்லை தாங்க முடியாமல் அனுப்பி வைக்க, அவர்கள் அந்தக்காசில் ஒரு வீடும் கட்டி முக்கால்வாசி முடிந்திருந்தது.
அப்போதுதான் அந்த அதிசயம் நடந்தது. ஆனையிறவில் இருந்து புறப்பட்டு வந்த ஒரு "ஷெல்" சொல்லிவைத்தாற் போல் அவர்கள் கட்டிக்கொண்டிருந்த வீட்டின் மீது விழுந்தது. வீடு தரைமட்டமாகியது.
அந்த ஷெல்லுக்குத் தெரியுமா? இந்தப்பணம் வெளிநாட்டில் மானம் மரியாதையை விற்று உழைத்த பணத்தில் கட்டிய வீடு என்று.....
(பின்குறிப்பு: இது நடந்து இரண்டு வாரமாவதுக்குள் அதே சகோதரியிடம் இருந்து கடிதம் வந்திருக்கிறதாம், உடைந்த வீட்டைப் புதுப்பித்துக்கட்ட பணம் அனுப்பி வைக்கும் படி..)

சிவ... சிவா...

-மிஸ்டர். அவதானி-



**ம**னிதர்கள்தான் நாய், பூனை, கிளி போன்றவற்றை செல்லப் பிராணிகளாக வளர்ப்பார்கள். ஆனால், ஒரு மனிதக்குரங்கும் நாய், பூனைகளை வளர்க்கிறது! "டாமி" என்ற இந்த மனிதக்குரங்கு, ஜப்பானில் ஒரு மிருகக்காட்சி சாலையில் இருக்கிறது. தான் வளர்க்கும் நாய், பூனையை தானே குளிப்பாட்டி, சாப்பாடும் கொடுக்கிறது!

## இது எப்படி இருக்கு?

## SAME PROBLEM

எனது நண்பன் ஒருவர் முன்பு ஜெர்மனியில் இருந்தவர். றெஸ்ரூரண்ட் ஒன்றில் வேலை பார்த்து வந்தவர். வந்த புதிதில் வேலை கிடைத்த சந்தோஷம். செப்பன் (முதலாளி) நல்லவன், நல்ல சம்பளம் என்று பெருமையாக சொல்லுவார். நாள் செல்லச்செல்ல அவர் முகத்தில் சோர்வு முன்பிருந்த சந்தோஷம், கலகலப்பு எல்லாம் குறைந்துவிட்டது.
இது என்ன வேலை கூட்டல், கழித்தல், கழுவல் வேலை அதைவிட இவங்கட பாசை ஆருக்கு விளங்கும். இங்கிலீஸ் என்றால் பரவாயில்லை. இங்க இவங்களுடன் இங்கிலீசிலை பேசினால் அவங்களுக்கும் விளங்குதில்லை என்று அலுக்க துவங்கிவிட்டார்.
லண்டன் போனால் இங்கிலீசு பேசலாம், நல்ல வேலை எடுக்கலாம் என்று லண்டன் போகும் முயற்சியில் ஈடுபடத்துவங்கி விட்டார். கடைசியில் களவாக லண்டன் போய் சேர்ந்துவிட்டார்.
லண்டன் போய் பலவருடங்கள் அவருடன் தொடர்பு இல்லாமல் போய்விட்டது. பின்பு எப்படியோ அவரின் தொலைபேசி நம்பர் கிடைத்தபடியால் அவருக்கு போன் பண்ணினேன்.
"எப்படி மச்சான் சுந்தரம் லண்டன் வாழ்க்கை. இவ்விடம் இருக்கும் போது பாசை பிரச்சனை என்று தானே லண்டன் போனாய், உவ்விடம் வேலைகள், அதாவது நல்ல வேலைகள் ஏதாவது கிடைத்ததா?" என்று கேட்டேன்.
அவர் சொன்ன பதில் எனக்கு சிரிப்பைத்தான் கொடுத்தது. "என்னெண்டு மச்சான் சொல்லுறது எல்லாம் "சேம் புரப்பிலம்" (SAME PROBLEM) தான்" என்று சொன்னான். அவர் சொன்ன "சேம் புரப்பிலம்" பாசை பிரச்சனையைத்தான்! "உழுகிற மாடு என்றால், எங்க இருந்தாலும் உழும்!"

-சுவிஸிலிருந்து- திருவாளர் அகதியார்-

## தேடுகிறோம்

நாதன் என அழைக்கப்படும் பத்மநாதன் செபஸ்தியான் - அவரது மனைவி உதயா என அழைக்கப்படும் ஜமுனாராணி பொன்னுத்துரை (வவுனியா) கடந்த 3 வாரங்களாக காண வில்லை. தயவு செய்து தக வல் தெரிந்தோர் கீழ்க் காணும் முகவரியுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

T. **விஜயன்**
Frankfurt str - 10
64521, Gross - Gerau
Germany
Tel: 06152/ 40060

# தேன்கூடு...

வாலாட்டுபவர்கள் ஜாக்கிரதை யாகவே இருக்க வேண்டும் என்று சொல்வதுபோல, நைஜீரியா, ஆர் ஜெண்டினாவை (3 -2 கோல்கல் என்ற வித்தியாசத்தில்) மண் கவ்வி இருக்கின்றது.

டென்னிஸ் விளையாட்டில், பெண் கள் விளையாட்டிலம் ஆண்கள் விளையாட்டிலும் அமெரிக்கர்களே வென்று எமது மண்ணில் எமது ஆட்சிதான் என்பதை நிரூபித் திருக்கிறார்கள். பெண்கள், ஆண் கள் இருவர்களது இறுதிப் போட் டிகளிலும் ஸ்பெயின் நாட்டவர் களே எதிர்த்து ஆடி தோல்வி கண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

ருஷ்யா, சோவியத்யூனியனாக இருந்த போது விளையாட்டில் கொடிகட்டிப் பறந்தது நிஜந்தான். ஆனால், உடைந்து ருஷ்யா என் றாகி விட்டபின்பு பல வீரர்களை இழந்து பலம் குன்றி விட்டது. எனினும் மொத்தம் 63 பதக்கங் கள் எடுத்து (26 தங்கப்பதக்கங் கள்) இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளது. அமெரிக்காவோ 44 தங்கப்பதக்கங்கள் உட்பட 101 பதக்கங்கள் எடுத்து, முதலாவது இடத்தைப் பெற்றுள்ளது. மூன் றாவது இடத்தை ஜெர்மனி பெற் றிருக்கின்றது. மொத்தமாக 65 பதக்கங்கள் எடுத்திருந்தாலும் 20 தங்கப்பதக்கங்கள் மாத்திரமே பெற்றதால் மூன்றாம் இடத்திற்குத் தள்ளப்பட்டுள்ளது.

தங்கப் பதக்கங்கள் பெறுபவர் களை பல நாட்டு அரசுகள் பண மழையில் நனைய வைத்திருக்கின் றன. தென்கொரியா, தங்கப் பதக் கம் வெல்பவருக்கு மாதந்தோறும் ரூ 60,000 பென்சனாகக் கொடுக் கின்றது! ஜெர்மனியோ 7 லட்சம் ரூபாய் கொடுக்க முன்வருகிறது. ருஷ்யாவோ 36 லட்சம் ரூபா கொடுக்க, போலந்து நாடு 20 லட்சம் ரூபாவும் ஒரு பியட் காரும் கொடுக்க இணங்கியிருக் கிறது. ஸ்பெயின் 54 லட்சம் ரூபாய் கொடுத்து கௌரவிக்க, தெ. ஆபிரிக்கா 24 லட்சம் ரூபாயை அள்ளி வீசுகின்றது.

ஒரு விளையாட்டு வீரர் இப்படிக் கௌரவிக்கப்பட ஒலிம்பிக் விளையாட்டுக் கமிட்டியின் தலைவர் சம்பளமாக எவ்வளவு பெறுகிறார் என்று நினைக்கிறீர் களா? 669,000 டாலர்கள்! தலையைச் சுற்றுகிறதா?

விளையாட்டை விளையாட்டுக் காகவே விளையாடிய காலம் போய், இன்று லட்சக்கணக்காக சம்பாதிக்கவே விளையாடுகிறார் கள் என்பதற்கு ஒலிம்பிக் விளையாட்டுக்களும் விதிவிலக் கல்ல போலிருக்கின்றது!

# கேள்வி...

**ஆனால், அங்கும் - இங்கும் நிம்மதியைத் தொலைத்து விட்டவர்களாகவே இருக் கிறார்கள்.**

**ஏ. ஜே. ஞானேந்திரன் தந்த ஒரு சிறிய புள்ளிவிபரம்:**

**கடந்த 10 வருடகால யுத்தங் களில், பெருமளவு குழந் தைகள் ஒன்றில் முடமாக்கப் பட்டோ அல்லது கொல்லப் பட்டோ இருக்கிறார்களாம்.**

**ஏறத்தாழ 2 மில்லியன் பிள் ளைகள் கொல்லப்பட்டிருக் கிறார்கள்!**

**4 தொடக்கம் 5 மில்லியன் பிள்ளைகள் முடமாக்கப்பட் டிருக்கிறார்களாம்!**

**5 மில்லியன் வரை அகதிகள் முகாமிற்கு விரட்டப்பட்டி ருக்கிறார்களாம்!**

**12 மில்லியனுக்கு மேற்பட் டவர்கள் வீடுவாசல் இழந்து நடுத்தெருவில் போய் நிற்கி றார்களாம்!**

**இந்த லட்சணத்தில் யுத்தங் கள் உலகில் தேவைதானா?**

## 6 ஆம் மாத நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



புங்குடுதீவு, 9 ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண் டவரும், ஜெர்மனி WESTERKAPPELN நகரில் 27.02.1996 அன்று இறைவனடி சேர்ந்தவருமான

### தம்பிப்பிள்ளை பிறேமநாயகி

மலர்வு: 27. 03. 1970 - உதிர்வு: 27. 02. 1996

அன்பு தெய்வமே இறைவன் அழைப்பில் 6 மாதங்கள் சென்றாலும், எங்கள் உள்ளம் உங்களை தேடுகின்றது. கனவிலும் நினைவிலும் எங்கள் செயல் யாவிலும் நீங்கள்தான் நிறைந்து இருக்கின்றீர்கள். அன்னாரின் மறைவுச்செய்தி கேட்டு , (அன்னாரின் அந்தியேட்டி வீட்டுக்கிருத்தியத்திலும் கலந்து கொண்டு) எமது துயரத்தில் நேரடி யாகவும், தொலைபேசி மூலமாகவும் தொடர்பு கொண்டு ஆறுதல் கூறிய உற்றார், உறவினர், நண்பர்களுக்கு எமது நன்றியை தெரிவித் துக் கொள்ளுகின்றோம்.

சகோதரர்கள்-
த. கணேசலிங்கம் - ஜெர்மனி - Tel: 0171/ 2753279

# சிறுகதை...

பிரச்சனையை உங்களோட பகிர்ந்து கொள்ளுறதில எனக் கொரு நன்மையும் இல்லை. உங் கட மனத்திருப்திக்காக சொல் றன். இருபத்தியொரு வயதில் ஜெர்மனிக்கு வந்தனான் இவ்வ ளவு காலமும் குடும்பம் குடும்பம் என்று காலம் போயிற்று. 'பருவத்தே பயிர் செய் என்று வாய் கிழிய சொல்வீர்களே! அந்தப்ப ருவ, அனுபவிக்கத்துடிக்கிற வயது கல்யாணம் செய்து சந் தோஷமாக இருக்கிற வயதில் கடும் உழைப்பு குடும்ப நலன், வசதி என்று காலங்கடந்திட்டுது. ஆனால், கடந்த எனது இளமைக் கால வயதுகளில் என் இயற்கை உணர்ச்சிகள் எப்படியாவது தீர்க் கப்பட்டாக வேண்டுமே அதனால் வேசிகளிடமும் செக்ஸ்சிக்காக என்னை நாடும் பெண்களிடமும் தொடர்புகளைக் கொண்டு என் இயற்கை உணர்வுகளை தீர்த்துக் கொண்டேன். காலங்கடந்து பெற் றோர்கள் எடுக்கும் முயற்சி எனக்கு பொருத்தமற்றதாகவே படுகிறது. அத்தோடு முன்பின் அறியாதவளோடு கலியாணம் என்ற பந்தத்தில் ஈடுபட்டு வாழ் வதென்பது என்னைப்பொறுத்த வரை அதற்கான பக்குவம் இல் லாமல் போய்விட்டது. அத்தோடு இங்க எடுக்கிற சம்பளத்தில் கல் யாணம் கட்டி குடும்பமும் நடத்தி எனது பெற்றோர், அவளது பெற் றோர் என்று உதவியும் செய்து 'செக்கு மாடுகள் போல்' வாழ்க்கை வசதிகளை தியாகம் செய்து வாழ்வதைவிட தூக்கு போட்டுக்கொண்டு சாகலாம் என் பது எனது கொள்கை. இந்த அப் பாட்மென்றில் ஒரு அறையில் நாலுபேர் இருக்கிறீங்களே அது மாதிரி என்னால் இருக்க முடி யாது.

(அடுத்த இதழில் முடியும்.)

## *கள்ளக்காதலுக்கு தண்டனை கற்பழிப்பு!*

*ஹரித்வார், உத்தரபிரதேச மாநிலத்தில் உள்ள லேஹோலி என்ற கிராமத்தில் 'பிதாரி' என்ற சமூகத்தினர் வசித்து வரு கிறார்கள். இந்த சமூகத்தை சேர்ந்த ஒரு பெண் (பெயர் வெளியிடப்படவில்லை) 26 வயது ஆனவள். திருமணம் ஆகி 3 குழந்தைகள் உள்ள னர். இந்த நிலையில் அவளுக்கும், வேறு ஒரு நபருக்கும் இடையே கள்ளக் காதல் தோன்றியது. நாளடைவில் இந்த தொடர்பு வெளியாருக்கும் தெரியவந்தது.*

*தகவல் அறிந்த அந்த ஊர் பஞ்சாயத்தார் ஒன்று கூடி அந்த பெண் செய்த குற்றத்திற்காக அவளுக்கு பாடம் கற்பிக்கும் வகையில் தண்டனை வழங்க தீர் மானித்தனர். அதன்படி அவளை பலர் கற்பழிக்க வேண்டும் என்று தீர்ப்பு கூறப்பட்டது. இதை அறிந்த அந்த பெண், தனது காதலனுடன் ஊரைவிட்டே ஓடிவிட்டார். பிறகு சிறிது நாட்கள் சென்ற பிறகு மீண்டும் தனது சொந்த ஊருக்கு திரும்பி வந்தாள். அப்போது பஞ்சாயத்து தீர்ப்பின்படி அவளுக்கு தண்டனை வழங்கப்பட்டது. அவளை அந்த ஊரில் வசிக்கும் பல ஆண்கள் திரும்பத் திரும்ப கற்பழித் தனர்.*

## பொள்ளாச்சியில் 'இளைஞன்'

**இளைஞனை இரவல் வாங்கிப் படிப்போர்மீது சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என ஒரு பக்கத்தில் குறிப்பிட்டு விட்டு, இன்னொரு பக்கத்தில் ஓசி, கொடுப்போர் மீதும் சட்ட நடவடிக்கை எடுக்கப் படும் — என்று குறிப்பிட்டுள்ளது பத்திரிகையைக் காசு கொடுத்து வாங்கிப் படிக்கவேண்டும் என்கிற ஆதங்கத்தை வெளிப்படுத்துகிற துணிச்சலான இதழாளரைக் காட்டுவதாக உள்ளது.**

**மூன்றாமாண்டில் அடியெடுத்து வைத்துத் தொடருகிற இந்த இளைஞன் இதழ் தொடர்ந்து தரமான சிந்தனைகளை விதைத்து, தமிழ் மக்களை வழிநடத்திட வாழ்த்துகிறோம்.**

Largest Circulation in Europe
இளைஞன்

ELAIGNAN
Ginnheimer Str, 24 A
60487 Frankfurt/M
Germany
Tel: 069/ 704439, Fax: 069/ 775669

மக்களின் சகல தேவைகளையும் பூர்த்தி செய்ய நம்பிக்கையுடன் நாடவேண்டிய ஸ்தாபனம்!
லிங்கம் ஏசியன் மாக்கற்
ஜவுளி அகம் / மளிகைப் பொருட்கள்
தங்க மாளிகை / வீடியோ விஷன்
PIZZERIA MARE
Bruck str 37, 44135 Dortmund
Tel: 0231/ 55 16 84
LINGAM ASIAN MARKET
Adler str 5, 44137 Dortmund
Tel & Fax: 0231/ 14 38 11
PIZZERIA ISOLABELLA
Olpe 14, 44135 Dortmund
Tel & Fax: 0231/ 57 29 02

# யாழ்ப்பாணத்தில் விவசாயம் மீண்டும் ஆரம்பம்...?

இலங்கையின் வடபகுதியான யாழ்ப்பாணத்தில் இராணுவத்தாக்குதலால் (ஷெல் அடி, பம்பர் தாக்குதல்) விவசாயம் செய்வதை மக்கள் நிறுத்திவிட்டனர். டீசல், மண்எண்ணை, உரத் தட்டுப்பாடு போன்றவையும் இன்னொரு காரணம். தற்போது விடுதலைப்போராளிகளின் கட்டுப்பாட்டில் இருந்து யாழ்ப்பாணத்தை இராணுவம் மீட்டுவிட்டதை அடுத்து அங்கு வெங்காயம், மிளகாய், உருளைக்கிழங்கு, மரவள்ளி போன்ற உணவு வகைகளைப் பயிரிட மக்களை உற்சாகப்படுத்த இலங்கை அரசு முனைந்துள்ளது. விவசாயத்திற்குத் தேவையான விதைகள் மற்றும் உரவகைகளை யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைக்கவும் அரசு முடிவெடுத்துள்ளதாம்!

(கலப்பையைப் போட்டு உழும்போது நிலக்கண்ணி வெடியில் சிக்கி கொஞ்சம் சாகட்டும் என்பது அரசின் நோக்கமோ...? -ஆ.ர்.)

# சந்திரிகா அரசு பாசாங்கு!

இலங்கையில் அப்பாவி தமிழர்கள் மீது சிங்கள ராணுவ வெறித்தாக்குதல் நடத்தி வருகின்றதல்லவா? இதனால் உயிருக்குப்பயந்து ஈழத்தமிழ் அகதிகள் ராமேஸ்வரத்திற்கு வந்தவாறு உள்ளனர். ஆனால், தங்களின் கொடூர தாக்குதல்களை மூடிமறைக்கும் செயலில் ஈடுபட்டிருக்கும் இலங்கை அரசு ஈழத்தமிழர்கள் அகதிகளாக தமிழகம் தப்பி செல்வதை மறுத்துள்ளது. இதுபற்றி

தொடர்ச்சி 20 ம் பக்கம்...

# சொல்வதும் நீதானா?

What a difference a year makes...




பாருங்களேன்...

எப்படியெல்லாம் கட்சி மாறுகிறார்கள் என்று? ருஷ்யாவை ஆளவந்த தவறான மனிதன் என்று முகப்பு அட்டையிலேயே மட்டந்தட்டிய பிரபல்யமான சஞ்சிகை, தனது இன்னொரு இதழில் ருஷ்யாவை ஆள ஒரே மனிதன் என்று பொறிஸ் யெல்சினைத் தூக்கிப் பிடிக்கின்றது. தேவைதானா?

# இதுதான் கொண்டாட்டம்!



என்னதான் பணக்காரராக இருந்தாலும், இப்படி அள்ளிவீச யாருக்குமே மனம் வராது என்பது நிஜமே தான். நிறைய இருக்கலாம். ஆனால், நிறையக் கொடுக்கும் மனம் எல்லோருக்கும் வந்துவிடுகின்றதா? புருணை நாட்டின் சுல்தானைப் பற்றி என்ன தெரிந்து வைத்திருக்கிறீர்கள்? இவர் சாதாரண பேர்வழி அல்ல! உலகிலேயே மிகப்பெரிய

தொடர்ச்சி 22 ம் பக்கம்...

http://www.thamizham.net
FREE E - BOOKS (TAMIL)
பொள்ளாச்சி நசன்
-1082/09


லக்கி ஏசியா சொப்
22 கரட் தங்க நகைகள், சாறி வகைகள், ஆண்கள், பெண்கள், சிறுவர்களுக்கானரெடிமேட் ஆடைகள், இலங்கை, இந்திய பத்திரிகைகள், கடதுணைவுப்பொருட்கள், போன்ற உங்கள் அனைத்து தேவைகளுக்கும் நாடுங்கள்! உங்கள் திருமண வைபவங்களுக்கு தேவையான சமையல் பாத்திரங்கள், காஸ் அடுப்புகள், றைஸ் குக்கர்கள் மற்றும் நம் நாட்டு உணவு வகைகளையும் ஓடர் முறையில் செய்து வழங்குபவர்கள்.
Schul str 2, 52353 Dueren, Germany, Tel & Fax: 02421/ 45840, Private: 01717571490